# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 7 ஞாயிற்றுக்கிழமை (24-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 284


# செம்மணியில் மீட்ட எலும்புக்கூடுகள் பரிசோதனைக்காக வெளிநாட்டுக்கு

செம்மணிப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் ஆறு எலும்புக் கூடுகள் மரபணுச் சோதனைகளுக்காக விரைவில் அமெரிக்காவுக்கு அல்லது பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்படும்.

சட்டமருத்துவத்துறை நிபுணரும் செம்மணிப் புதைகுழிகள் தோண்டும் பணிகளுக்கு தலைமைவகித்தவருமான பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மீதான ஆரம்பக்கட்ட மருத்துவப் பரிசோதனைகள் நடத்தி முடிக்கப்பட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

செம்மணியில் கண்டுபிடிக்கப்பட்ட 15 எலும்புக் கூடுகளில் 14 எலும்புக் கூடுகள் ஆண்களுடையவை. ஒன்று மட்டுமே பெண் உடையது. கொன்று புதைக்கப்பட்டவர்கள் அனைவரும் 16 முதல் 35 வயதுக்கு இடைப்பட்டவர்கள்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டானில் மோதல்

வவுனியா, ஒக். 24

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதலில் தமது தரப்பில் இருவர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். வீரவான் (இராசன் தயாளன் — யாழ்ப்பாணம்), அரசன்னா அல்லது சேரமான் (குணராசா குணதாஸ் — யாழ்ப்பாணம்) ஆகியோரே உயிரிழந்தவர்கள் என்று தெரிவிக்

[14 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ்-முஸ்லிம் கட்சிகளுடன் பொ. ஐ. மு. பேச்சு நடத்தும்

மட்டக்களப்பு ஒக். 24

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொது மக்கள் ஐக்கிய முன்னணி தமிழ், முஸ்லிம் கட்சி களுடன் பேச்சு நடத்தவுள்ளது அடுத்த வாரம் மேற்படி கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ5-6-2)

## இடதுசாரிக் கட்சிகளின் பொது வேட்பாளர் யார்?

### செவ்வாயன்று தெரியவரும்

கொழும்பு, ஒக். 24

இடதுசாரிக்கட்சிகளினால் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படவிருக்கும் பொது வேட்பாளர் பற்றிய விவரம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இடதுசாரிக்கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய பேச்சுவார்த்தைகளை தற்பொழுது நடத்தி வருகின்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் மின் மாற்றி தகர்ப்பு

கொழும்பு, ஒக். 24

கொழும்பு ஆட்டுப் பட்டித் தெருவில் உள்ள மின் மாற்றி ஒன்று நேற்றிரவு 10.10 மணியளவில் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து பொலீஸார் அப்பகுதிக்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். எவரும் கைதாகவில்லை.

(இ 6-164)

# புலிகளுடன் பேசாமல் பிரச்சினை தீராது!




சொல்லுகிறா ஆனால் செய் கிறா இல்லை...!

## பி.பி. ஸிக்கு ஜனாதிபதி பேட்டி

கொழும்பு, ஒக்ரோபர் 24

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தாமல் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை விரைவில் நடத்துவது என அறிவிக்கப்பட்ட பின்னர் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் அந்தப் பேட்டியில் தெரிவித்ததாவது:-

நான் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் 16 ஆண்டு காலமாக நடந்துவரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவேன்.

அத்துடன் வடக்கு — கிழக்குக்கான அரசியல் தீர்வுத் திட்டத்தையும் அமுல்செய்வேன். அரசியல் தீர்வுத் திட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றுவதற்கு ஐ.தே.க. ஆதரவு தரவில்லை. எனவே நான் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் சட்ட முறைகளைப் பயன்படுத்தி

[14ஆம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளம் பகுதியிலும் தகர்ப்பு

வவுனியா, ஒக். 24

வவுனியா செட்டிகுளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 10-30 மணியளவில் மின்மாற்றி மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலினால் மின்மாற்றி முற்றாகச் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியிலுள்ள மின் மாற்றிக்கு ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு பாதுகாப்பு

(13 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலை பொலீஸ் நிலையம் புலிகளினால் தாக்கப்பட்டது!

### நேற்று அதிகாலை முதல் கடும் சமர்

வவுனியா, ஒக். 24

பேசாலை பொலீஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை 1.30மணியளவில் விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினார்கள்.

அதிகாலை ஆரம்பித்த இந்தத் தாக்குதல் நேற்றுக் காலைவரை பல மணி நேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரம் தெரிவிக்கப்படாத போதும் பொதுமக்கள் தரப்பில் இரு பெண்கள் கொல்லப்பட்டதுடன் இருவர் காயமடைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தீப்பெட்டி எடுத்துச் செல்ல சந்திரிகா பேசிய கூட்டத்தில் தடை!

கொழும்பு, ஒக். 24

அனுராதபுரத்தில் நேற்று மாலை இடம்பெற்ற பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்குச் சென்றவர்கள் தீப்பெட்டி மற்றும் 'லைட்டர்' எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தத் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில்

[14 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியா - மன்னார் வீதியில் நேற்று தாக்குதல் சம்பவம்

### படையினர் - 4, பொதுமக்கள் - 7 காயம்

வவுனியா, ஒக். 24

வவுனியா — மன்னார் வீதி செக்கடிப்புலவுப் பகுதியில் நேற்றுக் காலை 7-30 மணியளவில் வீதித்துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலினால் அதிரடிப் படையினர் தரப்பில் நால்வர் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச்சம்பவத்தை அடுத்து வவுனியா — மன்னார் வீதியில் பயணம் செய்த பொது மக்கள் சிலர் கடுமையாகத் தாககப்பட்டனர் என்றும் —

இந்தத் தாக்குதலில் காய

(13 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 15 பேர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 24

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் நேற்று இடம் பெற்ற பஸ் விபத்தில் 9 பெண்கள் உட்பட 15 பேர் காயமடைந்தனர்.

வவுனியாவிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணிகளுடன் வந்துகொண்டிருந்த போக்குவரத்துச் சபை பஸ்ஸுக்குப் பின்புறமாக வந்த லொறி ஒன்று பஸ்ஸுடன் மோதியதனால் பஸ் குடைசாய்ந்ததுடன் அதில் பயணம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. கவின் பிரசாரம் 30 ஆம் திகதி ஆரம்பம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்தை ஐ. தே.க. எதிர்வரும் 30 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஐ தே. கவின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது ஐந்து கட்டங்களில் தேர்தல் பிரசாரப் பணிகளை மேற்கொள்வது என்றும்தீர்மானிக்கப்பட்டது

இந்தப் பிரசாரப் பணிகளில் தேசிய மற்றும் கிராமப்புறக் கூட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் என ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேசமயம்—

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(இ-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அடையாளம் காணப்படாத நிலையில் சடலங்கள் அடக்கம்

யாழ்ப்பாணம், ஒக் 24 சாவகச்சேரிப் பொலீஸாரால் கடந்த 16 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட நான்கு சடலங்களும் கடந்த 14 ஆம் திகதியும் 12 ஆம் திகதியும் யாழ். பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட நான்கு சடலங்களும் கடந்த 19 ஆம் திகதியும் 21 ஆம் திகதியும் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

இனங்காணும் பொருட்டு யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இந்தச் சடலங்கள் நீண்ட நாள்களாக இனங்காணப்படாததை அடுத்தும் சகித்துக்கொள்ள முடியாத துர்நாற்றம் வீசியதை அடுத்தும் நீதிமன்ற உத்தரவினைத் தொடர்ந்து அடையாளம் காணப்படாத நிலையிலேயே அடக்கம் செய்யப்பட்டன. (இ-15)


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

மன்சூர் அலிகான் – சங்கீதா நடித்த

**ஜெயம்**

(புதிய வெளியீடு)

காட்சிகள்: 10-30, 2-30

T.P.No. 070-212223 - 2678

(70166)


# சமய சந்நிதிகளில்

வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் புனராவர்த்தன சம்புரோக்ஷண அஷ்டபந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

இதற்கான கர்மாரம்பம் கடந்த 20 ஆம் திகதி காலை 5 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (இ-15)

நெல்லி மாநகர் மகாதனை சாமூண்டாம்பிகா சமேத நரசிங்க வைரவர் ஆலய மகா கும்பாபிஷேக விழா இன்று ஞாயிறு காலை 9-00 மணியளவில் இடம் பெறவுள்ளது.

தர்சனம். ஆசாலிய சம்பாதனை மஹா அபிஷேகம், போன்றனவும் இடம் பெற உள்ளன. (இ-6)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### மெய்கண்டதேவர் பராசத்திப்பிள்ளை

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த காலஞ்சென்ற மெய்கண்டதேவர் (P.W.D ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவி திருமதி மெய்கண்டதேவர் பராசத்திப்பிள்ளை 22-10-99 அன்று காலமானார்.

அன்னார் தேவகுமாரி (கனடா), சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரசேகரமுதலி (பொறியியலாளர் கனடா), குகதாசன் (காப்புறுதி முகவர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சிற்றம்பலம் (கிராம அதிகாரி) அவர்களின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (கூட்டுறவுப் பரிசோதகர்), காலஞ்சென்ற நடராசபிள்ளை (கிராம சேவை உத்தியோகத்தர்), குமாரசாமி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்திரகுமார் (பல்கலைக்கழக மாணவன், கனடா), சாந்தி (கனடா), மாறன் (கனடா), சுதர்சன் (ஹாட்லிக் கல்லூரி, மாணவன்), சுலக்ஷன் (உ. அ. மி. மாணவன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-10-99 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி குகதாசன் (மருமகன்)

வரணி, இடைக்குறிச்சி,
வரணி.

(70271)

### வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்

(உரிமையாளர், சேகரம் அன் சன்ஸ்)

தொண்டமனாற்றைச் சேர்ந்த வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் [உரிமையாளர்; சேகரம் அன் சன்ஸ்] கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை— வள்ளியம்மை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற அரசரத்தினம்மாவின் அன்புக் கணவரும் வடிவேற்கரசன், சங்கநிதி, ஸ்ரீபத்மநாபன், கனகேஸ்வரி, பயோதரிஅம்பாள், வத்சலாராணி, தொண்டமநாபன், கேமந்தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் நடேசன், விவேகானந்தன், சிவகுருநாதன், தியாகலிங்கம், பத்மினி, தங்கா, ஸ்ரீரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் இரத்தினலிங்கத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [24-10-99] ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காகக் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. ஸ்ரீபத்மநாபன்

271 செட்டித்தெரு,
கொழும்பு-11

(70274)

## கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 24 திருநெல்வேலி இந்து அக்கடமி கல்வி நிலைய மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்விநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நிறுவன அதிபர் எம். சிறீதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். [ஐ-7]

## பாடசாலைகளுக்கு மலசலகூடங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 24 ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் யாழ். மாவட்டத்தில் நூறு பாடசாலைகளில் மலசலகூடங்கள் அமைக்கப்படவுள்ளன

மலசலகூடங்களை அமைப்பதற்காக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் விவரம் வலயம்ரீதியாகவருமாறு:-

யாழ். கல்வி வலயம் —28, தீவகம்—19, தென்மராட்சி 22, வலிகாமம்—16, வடமராட்சி—15. (இ-5)

## தையல் பயிற்சி சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஒக். 24 தொழில்த் திணைக்களத்தினால் நல்லூர், கோப்பாய் உடுப்பிட்டி, பருத்தித்துறைப் பகுதிகளில் நடத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றி பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் சான்றிதழ்களுக்குரியவர்கள் புதன்கிழமைகளில் யாழ். ஸ்ரான்லி வீதி, சிறாம்பியடி ஒழுங்கையிலுள்ள தொழில் திணைக்களத்துக்கு நேரில் சென்று அடையாள அட்டைகளை காண்பித்து தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5)

உ

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கல்லூரி ஸ்தாபகர் ஒப்புரவாளர்

## உயர்திரு. சி. கந்தையா உபாத்தியாயர் உருவச்சிலை திறப்பு விழா வைபவம்

காலம்: 24--10--99 காலை 8. 30 மணி

இடம்: கல்லூரி முன்றல்

தலைவர்: திரு. க. சிவாஜி (அதிபர்) அவர்கள்

திரை நீக்கம்: திருமதி ச தர்மலிங்கம் அவர்கள் (ஸ்தாபகர் குடும்ப உறுப்பினர்)

மலர் மாலை வணக்கம்:
கொழும்பு பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள்

** மலர் வெளியீடு **

நிறைவுரை: திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர்) அவர்கள்

சிலை உருவாக்கம்: திரு. ரமணி அவர்கள்

சிலை ஸ்தாபிதம்: ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கொழும்பு — பழைய மாணவர் சங்கம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

பழைய மாணவர் சங்கம்,
கொழும்பு

## நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு வைபவமும்.

காலம்: 24--10--99 இன்று ஞாயிறு காலை 9.30 மணி

இடம்: "ஒறேற்றர் சுப்பிரமணியம் கலை அரங்கம்"

தலைவர்: திரு. க. சிவாஜி (அதிபர்) அவர்கள்

ஆசியுரை: சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் [தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்]

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் திரு. R இராஜேந்திரபிரசாத் அவர்கள்
(Dean of The Faculty of Medicine University of Jaffna)

நிறுவுநர் நினைவுப் பேருரை: திரு. து. ரகு அவர்கள் (Manager, Peoples Bank, Chavakachcheri)

பரிசில் வழங்கல்:
திருவாட்டி கௌரி இராஜேந்திரபிரசாத் அவர்கள்

விழாவுக்குச் சமுகமளித்துச் சிறப்பிக்கும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

கந்தரோடை,
சுன்னாகம்.

(சி/9489)

## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் லியோக் கழகத்தின் பதவியேற்பு வைபவம்

**1990 - 2000**

யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை

காலம்: 26-10-1999 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி

யாழ். மத்திய கல்லூரி லியோக் கழகம்

காலம்: 28-10-1999 வியாழக்கிழமை காலை 11.30 மணி

அனைத்து நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் பிராந்திய கபினற் அங்கத்தவர்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

லயன். த. சற்குணராசா (M.J.F.) தலைவர்

லயன். வி. எஸ். சொக்கலிங்கம் செயலாளர்

(சி/9500)

## நன்றிகள்

4-10-1999 அன்று இங்கிலாந்தில் இறைபதமெய்திய எனது தர்மபத்தினி

### ஸ்ரீமதி திரிபுரசுந்தரி அம்மாளின்

பிரிவுச் செய்தி அறிந்து தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், Fax மூலமும் கடிதங்கள் மூலமும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் இரங்கல் தெரிவித்தோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்று எமது ஆலயத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், சமாராதனையிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பேராசிரியர் கலாநிதி
பிரம்மஸ்ரீ கா. கைலாஸ்நாதக் குருக்கள்
10 MEADOW MEAD
RADLETT
HEARTS WD7 8ES
ENGLAND.

தேவஸ்தானம்,
சிவன் கோயில், நல்லூர்,
24—10—1999

(70284)



உடுவில் வடக்கு சுன்னாகம்

அருள்மிகு

# ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலய

# மகா கும்பாபிஷேகச் சிறப்பிதழ்

## 24.10.1999

## கும்பாபிஷேக பிரதம குருவின் அருளாசி

இன்றையதினம் எம்பெருமான் பஞ்ச முக விநாயகர், அம்மன், சிவன், முருகன், வைரவர் போன்றோருக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது, ஆலயங்களில் 12 வருடத்திற்கு ஒரு முறை பெரும்சாந்தி விழாக்கள் நடைபெறுகின்றன. இந்த ஆலயம் அழகிய கட்டட அமைப்புடன் சிறந்து விளங்குகின்றது. இப்பிறப்பில் செய்த பாவங்கள் நீங்கி எல்லா நலன்களும் பெற எல்லா அடியார்களும் இக்கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்கவும் மற்றும்இவ்வாலயம் எல்லா வழிகளிலும் சிறந்து வளர வேண்டும் என எம்பெருமானுக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்களுக்கும் எல்லா வழிகளிலும் உதவிய அனைத்து அடியார்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் கொடுக்க வேண்டும் என ஆசி கூறுகின்றேன்.

''மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்''

சாமி. சிறீஸ்கந்தராஜாக்குருக்கள்
கும்பாபிஷேக பிரதமகுரு

## துதிப்போர்க்கு நல்லவை கிட்டும்

''ஆங்காங்கே வீற்றிருந்து. உடுவில் கிராமத்து மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் விநாயகப் பெருமானுக்கு உடுவில் வடக்கில் மற்றுமோர் ஆலயம் அமைத்து, மகாகும்பாபிஷேகம் நடத்தி அருள்வேண்டி வழிபாட்டைத் தொடர இன்று உடுவில் வாழ் சைவமக்கள் விழா எடுத்துமகிழ்கின்றனர்.இந்த நன்னாளிலே, விக்கினங்கள் தீர்த்து சுக வாழ்வைத் தர வல்ல சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகரைப் பிரதிஷ்டை செய்துவழிபட முன் வந்துள்ள மக்களுக்கு எம்பெருமான் வேண்டும் வரம் வழங்கி அருள் பாலிக்க பிரார்த்தித்து, ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

'பிள்ளையாரைத் துதிப்போர்க்கு நல்லவை கிடைத்துவிடும்.'

- வி. பரிபூரணானந்த சர்மா-
(ஆசிரியர்- பத்திரிகையாளர்)

## ஆலய வரலாறு

இலங்கை நகரின் சிரசென அமைந்த யாழ்ப்பாணத்தின் வடமேல் திசையில் அமைந்த உடுவில் கிராமம் பண்டு தொட்டே சிவ வழிபாட்டுக்கும் சிறப்பாகப் பிள்ளையார் வழிபாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்தமை வரலாறு. அமெரிக்க மிஷனரிமார் யாழ்ப்பாணத்தில் உடுவில் பகுதியிலே தமது மதப்பிரசாரத்தை வேகப்படுத்திய வேளையிலும் தம் மதப்பற்றால் ஆசாரத்தால் நிமிர்ந்த கோயில்கட பலவற்றுள் சிவஞானப் பிள்ளையார், பரராசசேகரப் பிள்ளையார், கற்பொக்கணைப் பிள்ளையார், கற்பகப் பிள்ளையார் போன்ற ஆலயங்களின் வழிபாட்டுப்பழைமையால் உடுவில் பிரதேசம் செழித்த வரலாறு புதுமையானது. இந்த வகையில் அரை சகாப்தத்துக்கு முன் வட உடுவிலில் ஒரு மூலையில் சுயம்புவாகத் தோன்றிய இப் பிள்ளையார் இடைக்காலத்தில் காளிபாச்சியின் கருணையும் வரம் சொல்லும் சொர்ணம்மாளின் அற்புதமும் நிறைந்து பிரசித்தி கண்டது

இப் பிள்ளையார் தோன்றிய கதையைக் கூறும் மார்க்கண்டு செல்லம்மா என்னும் 80 வயது மூதாட்டி தாம் சிறுபிள்ளைகளாய் பாடசாலை சென்ற பராயத்தில் கண்ட நிகழ்ச்சிகள் இன்றும் பசுமையாய் நினைவிலிருப்பதாகக் கூறுகின்றார். அப்பொழுதெல்லாம் தாம் இப்பகுதியால் பாடசாலை செல்லும் வேளையில் ஒரு வெள்ளை நிற மாடு இங்கு படுத்திருப்பது தமது கண்களுக்குத் தெரிந்ததாகவும் அது பலருக்கு ஏன் தெரியவில்லை என்றும் ஏங்கி அங்கு விநாயகரை வைத்து வழிபடத்தொடங்கியதாகவும் விவரிக்கிறார்.

1990 களில் பத்திரகாளி சங்கரத்தைக்காளி அம்மன் வழித்தொண்டராயிருந்த பிட்டியம்பதி கணபதிபிள்ளை அன்னலட்சுமி அம்மாவின் புதல்வி சொர்ணம்மாள் இங்கு வந்து அம்மனையும் பிள்ளையாரையும் ஆதரித்த நிலையில் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. கலைவந்து சாமி அம்மா பேசும் போது பிரபல்யம் வேண்டாம் என உளறுவார்.

ஒரு திருக்கார்த்திகை நாளன்று கோயிலம்மா விளக்கேற்றச் சென்ற வேளை ஓர் அதிசயம்! ''பிள்ளையார் கிழக்கு நோக்கி இருக்க அஷ்டபந்தனமிட்டு, கருங்கல்லில் பிரதிஷ்டை செய்து மாபிள சாத்திய காளி அம்பிகை. பீடத்தோடு எந்தவித வெடிப்புகள், பிசிறல்கள் இன்றி வடக்கு நோக்கித் திரும்பி இருந்தாள். அந்த இடத்திலே நாகசர்ப்பத்தின் அடையாளங்கள் இருந்தன.

இவ்வாலய பிரகாரங்களில் இன்றும் நாகசர்ப்பம் உலாவுகின்றமைக்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இயற்கையாகவே தலவிருட்சமான வேப்பமரத்தோடு தற்போது அரச மரமும் இணைந்து தளிர்த்து வருகின்ற புதினமான ஒரு காட்சியைக் காணமுடிகிறது.

கருவறை, நான்குபுற சாரளவாயிலைக் கொண்டு சிற்பநுட்பங்களுடன் கூடியவிமானத்துடன் தற்போது காட்சியளிக்கின்றது இப்பிரமாண்ட ஆலயம் வரம் சொல்லும் சாமியம்மா. வரதர் சொர்ணம்மாவின் அற்புதங்கள், ஒரு புறம் பஞ்சமுகவிநாயகர் ஸ்தாபனம் ஒரு புறம், அம்மன் தானாகவே திசை திரும்பிய அற்புதம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச செயலரின் செய்தி

தன்னை விரும்பி வழிபடும் அடியார்களின் வினைகளைத் தீர்த்து வேண்டும் வரம் கொடுக்கும் விநாயகப் பெருமானுக்கு உடுவில் மக்கள் கோயில் எடுத்து கும்பாபிஷேகம் நிகழ்த்த இருப்பதாக அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்,

இது சம்பந்தமாக வெளியிடப்படும் விசேட மலருக்கு இச் செய்தியை வழங்குவதிலும் அளவிலா ஆனந்தம் அடைகின்றேன். விநாயகப்பெருமான் சர்வவல்லமை கொண்ட தமது தந்தையாரினதும், தாயாரினதும். சக்தியைப் பெற்றவர் எனப் புராணங்கள் கூறுகின்றன. இத்தகைய வல்லமைகொண்ட விநாயகனை வணங்கி ஆரம்பிக்கும் முயற்சிகளெல்லாம் வெற்றி அடையும் என்பது இந்துக்களின் நம்பிக்கை, விநாயகப்பெருமானைச் சகல உபசாரங்களோடும் வரவேற்று விக்கிரகத்தில் சாந்நித்தியம் பெருக இருத்தி அடியார்களுக்கு அருள் வழங்க யாசிப்பதே கும்பாபிஷேகக் கிரியைகளின் நோக்கமாகும். இப் பெருவிழாவைக் காண்போர் விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்வர்.

விநாயகப்பெருமானின் . திருவருள் நாடெங்கும் பரந்து போரும் பசியும் நீங்கி அன்பும் சுபீட்சமும் ஏற்பட வேண்டுமென எல்லாம்வல்ல அவனது திருவடிகளைப் பிரார்த்திக்கின்றேன், கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

ஆ. மகாலிங்கம்,
பிரதேச செயலாளர்,
வலி. தெற்கு, உடுவில்.

## துயர்துடைத்த தும்பிக்கையான்

உடுவில் திருப்பதியில் வாழும் சைவ அன்பர்களின் அயரா முயற்சியால் அற்புத விநாயகர் ஆலயம் எழுந்து இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. சிவபூமி என்னும் எம் புனித திருநாடு தன்னில் ஆன்மீகச் சுடர் ஒளிவிட்டுப் பிரகாசிப்பதற்கு ஆலயங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிறப்பு மலர் அமைப்பு:
**நியூ சித்திரகலா ஸ்ருடியோ**



## விழா சிறப்புற வாழ்த்துவோர்

| | | | | |
|---|---|---|---|---|
| ரஞ்சனாஸ் புடைவை அகம் 4A, மத்திய சந்தை, சுன்னாகம் | ஆனைமுகன் பொத்தக சோலை மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம். | தர்மி வீடியோ கொம்பிளெக்ஸ் டச்சு வீதி, உடுவில், சுன்னாகம். | நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ் பிரதான வீதி, சுன்னாகம். | மனோ லைற் எஞ்சின் இருபாலை, கோப்பாய் |
| செனித் மல்ரி ஸ்பொட் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | ஜெயமங்களாஸ் அழகு மாடம் 18, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | சிற்றி பெயிஸ்ற் ஹவுஸ் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | கிருஷ்ணா அழகு மாடம் 28, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். | கந்தசாமி – கோபாலசாமி கோயில் நிர்மாணக் கலைஞர், அராலியூர். |
| சண். நகைத் தொழிலகம் பலாலி வீதி, உரும்பிராய் சந்தி, உரும்பிராய். | கணபதி பந்தல் சேவை க. பாலசுப்பிரமணியம் இணுவில். | மைக்றோ ஒட்டோ வேக்ஸ் 354, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். | செ. பாலச்சந்திரன் ராணி வாகனம் & கிறசர் கொக்குவில். | அலோமாஸ் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். |
| வசந்திஜா எலக்றிக்கல்ஸ் (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக), கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். | மோகன் ஆட்ஸ் & ஸ்பிரே பெயின்ற் (மோ. மோகனதாசன்), உடுவில் வடக்கு, சுன்னாகம். | செனித் வோச் வேக்ஸ் & சேல்ஸ் சென்ரர் டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம. | ஸ்ரீ நாகபூஷணி நகை தயாரிப்பாளர் (தா. கி. சற்குணநாதன் – சற்குணம்) 671/1, கே. கே. எஸ். வீதி. பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். | நியூ சித்திரகலா ஸ்ருடியோ இல 104, கே.கே எஸ் வீதி, (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) சுன்னாகம். |
| சுமங்கலி சில்க் இல. 05, நவீன சந்தை, சுன்னாகம். | இளவரசி புடைவை மாளிகை & அழகுசாதன மாடம் K 12, நவீன சந்தை, சுன்னாகம். | கண்ணன் ஸ்ரோர் டச்சு றோட், உடுவில், சுன்னாகம். | மங்கை சில்க்ஸ் இல. 8, நியூ மார்க்கட், சுன்னாகம். | நியூ ரட்ணம் ஸ்ரோர் & போட்டோ கொப்பிங் டச்சு றோட், உடுவில், சுன்னாகம் . |

(சி/9479)

## பாராட்டுகின்றோம்

காரைநகர்ச் செம்மல், நவாலி வாழ்

**நடராஜா சிவபாலன்** அவர்களுக்கு

அவரது கலைச்சேவையைப் பாராட்டிப்
பாடசாலையின் சார்பில்

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களால்

''சிற்பமாமணி''

என்ற பட்டத்தை பரிசளிப்பு விழாவாகிய இன்று வழங்கிக் கௌரவிக்கின்றோம்.

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை**

24-10-99 (70261)

## இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 24

கொழும்புத்துறைப் பகுதியில் கடந்த புதன்கிழமை இளைஞர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை 4 ஆம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த இரட்ணசிங்கம் ராஜமோகன் (வயது-20) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

[இ-5-9]

## மின்னை துண்டித்துவிட்டு வீட்டில் திருட முயற்சி

இரவு வேளை வீட்டின் மின் இணைப்பைத்துண்டித்துவிட்டு ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் வீட்டாரின் கூக் குரல் காரணமாகக் கையில் அகப்பட்ட சூட்கேசில் இருந்த 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

இச் சம்பவம் கடந்த 10 ஆம் திகதி நல்லூர்ப் பகுதியில் இடம்பெற்றது.

நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதியில் எஸ். சின்னத்தம்பி என்பவரது வீட்டிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருடர்கள் வீட்டின் மின்சார 'பியூஸ்' கட்டையினைக் கழற்றி வைத்து விட்டு கூரை ஊடாக உள்ளே இறங்கிய வேளை சத்தம் கேட்டு வீட்டில் இருந்தோர் குரல் எழுப்பினர். இதனால் கலவரமடைந்த திருடர்கள் அங்கிருந்த இரு சூட்கேஸ்களை எடுத்துக் கொண்டு உட்புறமாகத் திறப்புடன் காணப்பட்டகதவைத்திறந்து தப்பி ஓடிவிட்டனர்.

இத் திருட்டு தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

[ஐ-180]

## உதிரிப்பாகங்கள் இன்றி 30 பஸ்கள் முடக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 24

இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள இன்றி 30 பஸ்கள் வடபிராந்திய போக்குவரத்துச்சாலையில் முடங்கிப் போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இயந்திரங்கள் மற்றும் கியர் பொக்ஸ் இன்றி 17 டாட்டா பஸ்களும்—

இயந்திரமின்றி அசோக் லேலண்ட் பஸ் ஒன்றும், 5 அசோக் லேலண்ட் லால் ரக பஸ்களும்—

கியர் பொக்ஸ் இல்லாமல் 3 பஸ்களும்—

கிறேட் வோல்ட் இல்லாத நிலையில் 4 பஸ்களும்— ஓட முடியாத நிலையில் நிற்கின்றன என்று வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் வி. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

தற்பொழுது கோண்டாவில்சாலையில் 50 பஸ்களும் பருத்தித்துறை சாலையில் 22 பஸ்களும் சேவையிலீடுபடுகின்றன என்றும் அவர் கூறினார். (இ-5)

## யா/இணுவில் மத்திய கல்லூரி
## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1999

சித்தியடைந்த பின்வரும் 18 மாணவர்களையும்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ராஜசேகரம் நவசக்தியா | 154 | பஞ்சலிங்கம் தயாளினி | 132 |
| சண்முகானந்தம் ஜெனிசா | 149 | மகேந்திரலிங்கம் ரிஷிகேசன் | 129 |
| தாமநாயகம் துஸ்யந்தி | 147 | பாஸ்கரன் தர்மினி | 127 |
| சர்வேஸ்வரன் துஷித்தா | 144 | கதிர்காமஈஸ்வரன் சங்கீர்த்தா | 124 |
| சிவபாலசர்மா லாவண்யா | 143 | இரட்ணசபாபதி ஜீவிதா | 124 |
| சண்முகராசா சயந்தினி | 142 | கதிர்காமசேகரம் கௌசிகா | 121 |
| அழகானந்தம் யசோதா | 142 | குமாரசாமி பார்த்தீபன் | 121 |
| சிற்சபேசன் கௌரீசன் | 139 | சத்தியநாதன் சுஜீபன் | 120 |
| சிவலிங்கமூர்த்தி கோகுலராஜ் | 136 | நாகேந்திரன் சிலாங்கி | 119 |

வலிகாமம் கல்வி வலயத்தில் அதி கூடிய எண்ணிக்கையான மாணவர்களைச் சித்தி பெறப் பயிற்றுவித்த சகல ஆசிரியர்களையும் அவர்களை வழி நடத்திய கல்லூரி அதிபர், பிரதி அதிபர், துணை அதிபர் ஆகியோரையும் நாம் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

[70249]

## மழையால் விவசாயம் பாதிப்பு

சுழிபுரம், சங்கானை, அராலி ஆகியஇடங்களில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் விவசாயிகள்பாதிக்கப் பட்டுள்ளனர்.

தொடர்ச்சியான மழை காரணமாக நெல் வயல்களில் பயிர்கள் முளைக்காமல் அழிந்து போய்விட்டதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை விதைக்காத வயல்களிலும் விதைக்க முடியாமல் வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் பெருமளவில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் சுழிபுரம் பகுதி வயல்களில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதைக் காணக் கூடியதாக உள்ளது.



# ராஜா கொமினிகேசன்
# RAJA COMMUNICATION

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

MARKET ROAD,
UDUPPIDDY.

ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டுக் கட்டணக் குறைப்பு

இரவு பகல் சேவை

உள்ளூர் அழைப்பு நிமிடம் 7.00 ரூபா உள்வரும் அழைப்புகளுக்கு நிமிடம் 5.00 ரூபா

வெளிநாட்டு அழைப்பு I. D. D. நிமிடம் 100.00 ரூபா

அத்துடன் போட்டோ கொப்பி லெமினேற்றிங் செய்யப்படும்.

போட்டோ கொப்பி 1 பக்கம் 4.00 ரூபா

**பக்ஸ் (தொலைநகல்) இல. 070-212297**

**தொலைபேசி இல. 070-212297, 070-212402**

கிளை ஸ்தாபனம்:

# வேணு கொமினிகேசன்
# VENU COMMUNICATION,

**தொலைபேசி இல. 070 - 212602 இரவு பகல் சேவை**

மேலுள்ள கட்டணத்துடன் அறவிடப்படும்.

- உரிமையாளர்

கெருடாவில். தொண்டமனாறு. (70247)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரி நிறுவுநர் சிலை திறப்பு விழாச் சிறப்பு மலர்

கந்தரோடை ஸ்தாபிதம் - 1894 சுன்னாகம்

மலா வெளியீடு- ஸ்கந்தவரோதயக் கல்லூரி கொழும்பு பழைய மாணவர் சங்கம்

## PRINCIPALS MESSAGE OF FELICITATION

It is indeed a great pleasure to send this message in connection with the unveiling ceremony of the statue of our college. Founder late Mr. S Kandiah Upathiyayar. The foundation stone to build Skandavarodaya College was laid on " The Vijayathasamy Day " in 1894. Now the installation of the founder's statue on the pedestal coincidentally occured on 19 th October 1999. " The Vijayathasamy Day. " It is a rare coincidence and this reveals the fact that our founder devoted his whole life for the betterment of Skandavarodaya College with purity of mind.

Skandavarodaya College Old Students Association, Colombo took the responsibility of erecting the Founder's statue in a most patriotic spirit I am very fortunate that the erection of statue for our founder has come to a reality during my tenure of office due to the untiring efforts of the Old Students Association, Colombo branch. They have been giving their fullest co-operation and conducting their activities in an outstanding manner for the glory of Skandavarodaya College. Their actions reveal their love and affection towards their alma mater.

I wish them all success.

K. SIVAJI
PRINCIPAL

SKANDAVARODAYA COLLEGE
KANDERODAI,
CHUNNAKAM




ஒப்புரவாளர்- உயர்திரு சி. கந்தையா உபாத்தியாயா அவர்கள்
(ஸ்தாபகர்- ஸ்கந்தவரோதயக் கல்லூரி)


## அன்னைசிவத்தமிழ்ச்செல்வி ஆசி

கல்வித் தொண்டு, கருணைத் தொண்டு அறப்பணிகளில் உன்னதமான பணி அறிவாலயம் எழுப்புதலாகும். ஆயிரக்கணக்கான ஏழைகளை அறிவியல் சமூகத்தில் மலர வைத்த வரலாற்றுக் கல்லூரி ஸ்கந்தவரோதயக் கல்லூரி இக் கல்லூரியின் ஸ்தாபகர் கந்தைய வள்ளலை கல்வி உலகம் மறந்துவிட முடியாது. பிறர் நலத்திற்காகப் பெருந் தொண்டாற்றிய இம்மகானின் மாபெரும் பணியை நினைவு கூரும் வகையில் இக் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கம் முழு உருவச்சிலையைக் கல்லூரி முன்றலில் நிறுவுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

''ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்', என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய உலக வாழ்வுக்காய் தம்மை அர்ப்பணித்த உத்தமர்கள் இறப்பிற்குப் பின்னாலும் போற்றப்படுவார்கள்: உயர்திரு. கந்தையா உபாத்தியாயர் இன்றும் எல்லோராலும் போற்றப்படுபவர். கல்லூரியின் சிறப்புக்கு அயராது பணி செய்கின்ற அதிபர், ஆசிரியர்கள், கல்லூரிச் சமூகத்தவர்கள் அனைவரையும் வாழ்த்தி மேன் மேலும் இக்கல்லூரி சிறப்புற்று ஓங்க அம்பாளைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)





கந்தையா வள்ளலின் சிந்தையில் எழுந்த கல்லூரி

கந்தையா வள்ளலின் திருவுருவச் சிலையை வடித்த சிற்பி



ரமணி

## Executive Committee ColomboOldBoysAssn

1998/1999 1999/2000

President
Mr. S. Mahendran - Mr. E. Kanendran

Secretary
Mrs. S. Vishnukanthan - Mr. R. Kathirakamanathan

Treasurer
Mr. P. Suntharalingam - Mr P. Suntharalingam

Vice President
Mr. B. Sri Ratnam - Mr. B Sri Ratnam
Mr. S. Kathirgamathamby - Mr. S. kathirgamathamby

Assistant Secretary
Mr R. Kathirakamanathan - Mr M. Dhayalan

Committee Members

| | |
|---|---|
| Miss K. Apputhurai | Mr. A. R. Balasiridharan |
| Mr. A R. Balasiritharan | Mr. A. Edirweerasingam |
| Mr M Dhayalan | Mr. S. Mahendran |
| Mr. A. Edirweerasingam | Mr. S Pathmanathan |
| Mr. E. Kanendran | Mr. A T. Perinpanathan |
| Mr. S. Pathmanathan | Mr. S. K. Satchithanandar |
| Mr. A. T. Perinpanathan | Dr. A. Sbakthivel |
| Mr. V. Vazavan | Mr. V. Vazavan |
| Dr. P. Kandasamy | Mrs S. Vishnukanthan |

Statue - Organising Committee

Chairman Mr. B. Sri Ratnam
Members Mr. E Kanendran
Mr. P. Suntharalingam
Mr. S. Kathirgamathamby
Mr. A. T. Perinpanathan
Mr. S. Pathmanathan
Mrs. S. Vishnukanthan

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து

நூற்றாண்டு கண்ட மாட்சியுடன், பல சித்திகளைத் தனதாக்கிய வண்ணம் காட்சி தரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியானது தன்னை உருவாக்கிய சிற்பியாம் கந்தையா உபாத்தியாயர் அவர்களைப் பிதாமகராக வணங்கி நிற்கும் திருவடிவக் கோலத்தில் இன்றைய தினம் கண்டு நான் பூரிப்படைகின்றேன்.

கொழும்பு பழைய மாணவர் சங்கமானது, கந்தைய வள்ளலைச் சிலைவடிவாக்கி ஸ்தாபகர் பெருமையைப் புனிதமாக்கிய வரலாற்று நிகழ்வானது பாராட்டுக்குரியதாகும். இன்றையதினம் நடைபெறும் சிலைதிறப்பு விழாவானது மேன்மேலும் ஸ்கந்தா அன்னையை வளமூட்டும்என மகிழ்ந்து இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வீ. இராசையா
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலிகாமம்
மருதனார்மடம், சுன்னாகம்.

## அபிவிருத்திச் சங்கத்தின் செய்தி

ஸ்கந்தவரோதயக் கல்லூரியானது, தன்னை உருவாக்கிய சிற்பியாம் கந்தையா வள்ளலுக்குத் திருத்தகு சிலையெழுப்பி, இன்று திறப்புவிழாவாகப் பெருமை சேர்க்கின்ற மாண்பினைக் கண்டு களிக்கின்றோம். கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் இம்முயற்சியில் வெற்றிகண்டிருப்பது பாராட்டுகுரிய ஒன்றாகும். ஸ்கந்தா அன்னையவள் அகமலர்ந்து பல வெற்றிகளைப் படைப்பதற்கு இவ்வைபவமானது ஆதாரமானதாக அமையும் என மொழிந்து, வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
(8 ஆம் பக்கம் பார்க்க)

## Message From The President, Statue Organising Committee

I have great pleasure in giving this message on the occasion of the unveiling, caremony of the statue of Mr S Kandiah founder of Skandavarodaya College. We have fulfilled the request made by the principal by erecting the Founder's statue We are very proud and happy that we had a chance to erect a statue for the Founder. We must remember with a deep sense of gratitude the Founder, who guided the destiny of this great institution to bring it to the present stature as one of the pioneering educational institutions I thank the Principal & Staff of Skandavarodaya College for their advice and assistance to make this endeavour a great success

B. SriRatnam
169, Grand pass Road,
Colombo - 14.

## உதவிகல்விப்பணிப்பாளர் செய்தி

வட இலங்கையின் தொன்மை வாய்ந்த தலைநகரங்களில் ஒன்றாக விளங்கிய கந்தரோடைப் பதியில் 1894 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் விஜயதசமித் தினத்தன்று உயர் திரு கந்தையர் அவர்களால் கால்கோள் இடப்பெற்றுக் கந்தரோடை ஆங்கிலப் பாடசாலையென ஆரம்பிக்கப்பெற்ற இவ்வித்தியாலயம் பல்லாயிரக்கணக்கானோருக்குக் கல்வியறிவூட்டி இன்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி என்னும் பெயருடன் வீறுநடைபோடுகின்றது.

இக் கல்லூரியின் ஸ்தாபகருக்கு கொழும்பு வாழ் பழைய மாணவர்கள் கல்லூரி முன்றலில் சிலையெடுத்துக் கௌரவிப்பதனையிட்டு வாழ்த்துகிறேன். அவர்களை மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறேன். அவர்கள் கல்லூரி அன்னை மீதும் ஸ்தாபகர் மீதும் கொண்ட அளவிடமுடியாத பற்று என்றும் நிலைக்கட்டும்.

அ- தற்பரானந்தன்
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
கோட்டக் கல்வி அலுவலகம், உடுவில்.

# நல்லூரில் மேலும் 263 குடும்பங்கள் 5 ஆயிரம் ரூபா பெறுவதற்கு தெரிவு

வலி. கிழக்கு, ஒக். 24

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் மேலும் 263 குடும்பங்களுக்கு மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

ஜே — 95, ஜே — 96, ஜே — 98, ஜே — 100, ஜே — 103, ஜே — 104, ஜே — 105, ஜே — 106, ஜே — 108, ஜே — 109, ஜே — 110, ஜே — 111, ஜே — 114, ஜே — 119, ஜே — 124, ஜே — 125, ஆகிய கிராமசேவை உத்தியோகஸ்தர் பிரிவுகளில் உள்ள 263 குடும்பங்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது

இக் கொடுப்பனவுக்குரியவர்கள் கிராம உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்திய பின்னர் நாளை திங்கள் முதல் வங்கிகளில் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ–180-86)

# புளொட் அமைப்பின் பெயரில் பணம் வசூலிப்புகள்; திருட்டுகள்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24

வடமராட்சி. தென்மராட்சிப் பிரதேசங்களில் எமது இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி மக்களிடம் பணம் வசூலிப்புக்கள் மற்றும் பொருள்கள் கடன் வாங்குதல், திருட்டுக்கள் போன்ற முயற்சிகளில் ஈடுபடுவோருக்கும் புளொட் அமைப்புக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை. இத்தகையோர் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்குமாறு வேண்டுகின்றோம்.

புளொட் அமைப்பு விடுத்துள்ள ஓர் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழு விவரமும் வருமாறு —

வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் எமது இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி மக்களிடம் பணம் வசூலிப்பு, பொருள்கள் கடன் வாங்குதல், திருட்டுக்கள் போன்ற செயல்களில் சிலர் ஈடுபடுவது குறித்து எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

எமது கட்சியில் இருந்து விலக்கப்பட்டவர்களான சொக்கன், சத்தியா, கரன், அம்மன், சந்திரன், சந்துரு, சீலன், ரபேஷ் சிவா ஆகியோர் சில எதிர்ப்புச் சக்திகளின் ஆதரவுடன் எமது கட்சியைக் களங்கப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டுள்ளதாக எமக்குத் தகவல்கள், கிடைத்துள்ளன.

ஆகவே பொது மக்கள் வியாபாரிகள் இத்தகைய செயல்கள் குறித்து விழிப்புடன் இருக்கவேண்டும்.

சம்பவங்கள் பற்றிய தகவல்களை அருகில் உள்ள பொலீஸ் நிலையத்திலோ அல்லது இராணுவ முகாமிலோ அல்லது எமது மாவட்டத் தலைமைக் காரியாலயத்திலோ தெரியப்படுத்தி இதுபோன்ற செயல்கள் மேலும் தொடராமல் தடுக்க எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்களில் இயங்கி வந்த எமது அலுவலகங்கள் தற்போது செயற்படாதுள்ளமையால் மக்கள் தமது முறைப்பாடுகளை யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் தெரிவிக்கவும்.

என்று அந்த அறிக்கையில் உள்ளது. (க)

# பன்றி இறைச்சி விற்க அனுமதி

தென்மராட்கி, ஒக். 24

பளைச் சந்தையில் பன்றி இறைச்சி விற்பனை செய்வதற்குப் பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

பளைச் சந்தையில் அநுமதியின்றி விற்பனை செய்யப்பட்ட பன்றி இறைச்சி பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டதையடுத்து சந்தையில் பன்றி இறைச்சி விற்பனை செய்வதற்கு அநுமதி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ—117)

# கடைகள் திறந்திருக்கும்

தென்மராட்சி, ஒக் 24

தீபாவளியை முன்னிட்டு இன்றும் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் பளை வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வியாபார நிலையங்கள் திறக்கப்படுமென சங்கத் தலைவர் க. தவராசா அறிவித்துள்ளார். [ஐ-117]


## உடன் தேவை

(வேலை ஆள் தேவை)

சமையல் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

ஹொட்டல் றொலக்ஸ்

340 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(70275)


# மக்கள் முகம்



புத்தூர் மேற்கு, பரமநாதர் குகதாசன் 27-09-99 அன்று யாழ். மாவட்ட மேலதிக நீதிவான், எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் அச்சுவேலி மகா வித்தியாலயம், பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1979 இல் இளைப்பாறும் வரை முறையே ஆவரங்கால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பொது முகாமையாளராகக் கடமையாற்றியுள்ளார். அனேக பொது ஸ்தாபனங்களில் உறுப்பினராகவும், புத்தூர் கிராமசபையில் உறுப்பினராகவும் உபதலைவராகவும் பல காலம் இருந்துள்ளார். தற்போது வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைப் பிரதிநிதியாகவும், இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள உத்தியோகத்தராகவும் (Agent) ஸ்ரீ விசாலாட்சி உடனமர் ஸ்ரீ விஸ்வநாதர் கோயில் உதவியாளராகவும் கடமை புரிகின்றார். (ஐ)

★ ★ ★



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது கோண்டாவில் வடக்கில் வசிப்பவருமான சரவணை அருளம்பலம் நீதி அமைச்சினால் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சமூக சேவையாளரான இவர் வாழைச்சேனை காகித உற்பததித் தொழிற்சாலையின் கட்டடப் பகுதியிலும் பின்னர் கொழும்பு துறைமுக ஆணைக்குழுவின் கீழ் சிவில் இயந்திரவியல் போமனாக கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய இடங்களிலும் பணியாற்றி ஒய்வு பெற்றவர். [ஐ-5]

★ ★ ★



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ் ஆர். ஜெயப்பிரகாசம் (நிர்வாக உத்தியோகத்தர் உடுவில் பிரதேச சபை) யாழ். மாவட்ட நீதிவான் ஏகநாதன் முன்னிலையில் 10. 10- 99 முதல் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியின் பழைய மாணவரான. இவர் கொழும்பு பல் கலைக் கழகப் பட்டம் பெற்று (B.A) யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய கல்வித் திணைக்களங்களில் கடமையாற்றியுள்ளார். பாரம்பரிய கலை பண்பாட்டுக் கழகச் செயற் குழு உறுப்பினராகவும் மருத்துவபீட பெற்றோர் சங்க அங்கத்தினராகவும் இருந்து சமய சமூக கலாசாரப் பணி புரிந்து வருகிறார். (ஐ-30)

★ ★ ★



வலிகாமம் தெற்கு பிரதேசசெயலகத்தில் பதவி நிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்றவரும் கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாகக்கொண்டவரும் தற்போது யாழ், சேர்.பொன். இராமநாதன் வீதியில் வசிப்பவருமாகிய வல்லிபுரம் தேவேந்திரன் நீதி அமைச்சு செயலாளரால்அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் அண்மையில் இவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மட்டுவில் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றுக் கொண்ட தேவேந்திரன் அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் சித்தியடைந்து கிளிநொச்சி செயலகம், யாழ்ப்பாண செயலகம், கொழும்பு காணிப்பதிவகம், செட்டிகுளம் பிரதேச செயலகம் ஆகியவற்றில் பல ஆண்டுகள் எழுதுவினைஞராகக் கடமையாற்றி ஒய்வு பெறும் காலத்தில் உடுவில் பிரதேச செயலகத்தில் பதவிநிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றியுள்ளார்.

உடுவில் பிரதேச செயலக நலன்புரிச் சங்கச் செயலாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளார். (ஐ-152)


உ

சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் ஐப்பசித் திங்கள் 7ம் நாள் (24-10-1999) இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 10 30 மணி முதல் 12.00 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய துலாலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு. திருமதி மயில்வாகனம் அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் **பாலகிருஷ்ணன்** (பாலா) அவர்களுக்கும்



திரு. திருமதி சின்னராசா அவர்களின் புத்திரி திருநிறை செல்வி **இராஜேஸ்வரி** (ராஜி) அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு இல. 1611 St. Regis Blvd மொன்றியாலில் அமைந்திருக்கும் திருமுருகன் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி மயில்வாகனம்
சிவன் கோயில் வீதி, மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி, இலங்கை.

திரு. திருமதி சின்னராசா அழகம்மா
அம்மன் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

[இரு வீட்டார் அழைப்பு]

5785 Cote Des Niges 209
Montreal, Quebec
Canada H3S 1Y8
T. P. (514) 341 – 9439

[70270]



## விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பிறந்த தின, திருமண வாழ்த்து மடல்கள் அழைப்பிதழ்கள் விற்பனைக்கு உண்டு.

**லிங்கன் ஸ்ரோர்ஸ்**

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/9487)

# உதயன்

## கொடைகளைப் பெற முயலுங்கள்

காலம் மாறுவதோடு மனிதனின் வாழ்க்கையும் மாறுவது வழக்கம். அந்த மாற்றம் அபனது முன்னேற்றமாக, வாழ்க்கை நிலையின் உயர்வாக அமைகிறது. முன்னேற்றங்கள் வரும்போது பழக்க வழக்கங்கள், வாழ்க்கை முறைகளில் மாற்றங்கள் உண்டாவது உண்டு.

ஆனால் அந்த மாற்றமும் முன்னேற்றமும் வாழ்க்கை நெறிகளையும் மரபுகளையும் கலாசாரங்களையும் பாரம்பரியங்களையும் மறைத்துவிட இடந்தரலாகாது. அவ்வாறு மறைய அனுமதித்தால் அந்தந்த இனத்தினதும் பிரதேசத்தினதும் தனித்துவம் அழிந்து போகும்.

ஈழத் தமிழ் மக்களின், யாழ்ப்பாணத்தவரின் இன்றைய சமுகப் போக்கு எமது இனத்தின் தனித்துவத்தை மிக விரைவில் அழித்து விடுமோ என்ற அச்ச நிலையைத் தோற்றுவித்துள்ளது. மிகக் குறிப்பாக இன்றைய சந்ததியின் வாழ்க்கை வழி பல அம்சங்களிலும் பிறழ்ந்து போயுள்ளது.

முதியவர்களின் நலன்களைப் பேணுவதில் அக்கறை குறைந்து போயுள்ளமை அந்தப் பிறழ்வுகளில் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். உலக உள வள நாள் நிகழ்வின்போது சுட்டிக் காட்டப்பட்டது போன்று, முதுமைப் பருவத்தை வெறுப்புணர்வுடன் பார்க்கும் தன்மை எமது மக்களிடத்தில் அண்மைக் காலத்தில் தோன்றியுள்ளது.

இளைஞர்கள் வயதானவர்களை "நயின்ரிகள்" என்று கிண்டல் செய்து ஒதுக்கிவிடுவதோடு மட்டும் நிறகவில்லை அவர்களைத் தங்களுக்கு ஒரு பாரம் என்று கருதிவெறுக்கும் நிலையையும் காண்கின்றோம்.

முதியோர்கள் என்றதும் அவர்கள் தமது பெற்றோர்களாக இருந்தால்கூட— அன்பு பாசம் என்ற எல்லா வகை நேயங்களையும் தூக்கி எறிந்து விட்டு, மனித நேயத்துக்கு "இருட்டடி" கொடுத்து அவர்களை வேண்டாதவர்களாக, தொல்லை தருபவர்களாகக் கருதும் தன்மை வேகமாகப் பரவுகிறது. முதியவர்கள் என்றதும் நோயுற்று, உடல் தளர்ந்து, தேக நலம் குன்றியவர்கள்; இவர்களுக்குப் பணிவிடை செய்வது, பராமரிப்பது பாரம் தூக்குவது போலாகும் என மதிப்பிட்டுபின்வாங்குகிறார்கள்.

தங்களைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய நன்றியைக் கூடக் கருத்தில் கொள்ளாமல், செய்நன்றி கொல்பவர்களாக மாறிப்பெற்றோர்களை வீட்டை விட்டு வேறெங்காவது அனுப்புவது குறித்து ஆலோசனை செய்கிறார்கள் பிள்ளைகள்!

இடம்பெயர்வு மற்றும் புலம்பெயர்வால் பெற்றோர்கள் பிள்ளைகளைப் பிரிந்து வாழ்வது இத்தகைய நிலைக்குக் காரணம் என்று சொல்லப்பட்டாலும் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது இளம் வயதுச் சந்ததியினரின் மனதில் பெற்றோரை மகிமைப் படுத்தும் மனப்பண்பு மறைந்து போவதே இதற்கான பிரதான காரணம் எனலாம்.

முதுமை என்பது வயதில் மட்டும் தங்கவில்லை ஒருவரின்மனதிலும் அது தங்கியுள்ளது. வயது அதிகமானாலும்பலரிடம்திறமை ஆற்றல் அனுபவம் என்பன நிறைய உண்டு. அவற்றைத் தக்கவாறு பயன்படுத்தினால் முதியவர்களால் சமூக வளர்ச்சிக்கும் நிறையப் பங்களிப்புச் செய்ய முடியும்.

மொத்தத்தில் முதியவர்கள் சமூகத்தின் அருஞ்சொத்துக்கள் கிழவர்கள் என்று கிண்டல் செய்துஒதுக்காது, அன்புகாட்டி, அரவணைத்து, மதிப்பளித்து அவர்களிடம் உள்ள அருஞ்செல்வங்களைக் கொடையாகப் பெற முயலவேண்டும். வயது குறைந்த சந்ததி இது குறித்து ஊன்றிச் சிந்திக்கட்டும்.

# இதுவரை கிடைக்காத இடங்களுக்கு

# தொலைபேசி வழங்க முன்னுரிமை

## ரெலிக்கொம் முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

இதுவரையும் தொலைபேசி வசதிகள் இல்லாத இடங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படுவதாக ரெலிக் கொம் நிறுவன வடபிரதேச முகாமையாளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கேபிள் மூலம் ஆயிரத்து 248 இணைப்புகளும், மோட்டோரோலா மூலம் 290 இணைப்புகளும் பருத்தித்துறை, சாவகச்சேரி பரிவர்த்தனை மூலம் 117 இணைப்புகளும் உட்பட மொத்தம் ஆயிரத்து 625 தொலைபேசி இணைப்புகள் தற்பொழுது யாழ். மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை மற்றும் பாதுகாப்பு அனுமதி பலருக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் தொலைபேசி இணைப்புக்கான லூப்புகள் மற்றும் சில உபகரணங்களின் பற்றாக் குறையினால் உடனடியாக இணைப்புக்களை வழங்க முடியாதுள்ளது.

கடந்த ஜனவரியிலிருந்து மேற்குறிப்பிட்ட அனுமதிகள் கிடைத்தவர்களுக்கு தொலைபேசி இணைப்புக்ளை கட்டம் கட்டமாக வழங்கி வருகின்றோம்.

மோட்டோரோலா இணைப்புக்குரியவானொலிக் கருவிகள் யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டதையடுத்து இதற்கான தொலைபேசி இணைப்புகள் நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டுவருகின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து கொக்குவில், கோண்டாவில், இணுவில் ஆகிய பகுதிகளுக்கான இணைப்பு வேலைகள் ரெலிகொம் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்படி அவர்தெரிவித்தார். (ஐ-5)

# முழுநிலாக் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 24

சாவகச்சேரி அரிமா கழகத்தினரின் ஆதரவில் முழுநிலாக் கருத்தரங்கு இன்று ஞாயிறு முற்பகல் 9.30 மணியளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெற உள்ளது.

"ஐக்கிய நாடுகள் தாபனத்தின் தற்போதைய பங்கும் பணியும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ. பாலச்சந்திரன் உரையாற்றவுள்ளார்.

ஐக்கியநாடுகள் தினத்தை ஒட்டி இடம்பெறும் இக் கருத்தரங்கில் தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். பிற்பகல் இசைநிகழ்வும் இடம்பெற உள்ளது [ஐ-ம]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் முழுநிலாக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 30 மணியளவில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறும் இக்கருத்தரங்கில் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேல் 'பாகிஸ்தான் இராணுவ புரட்சியும் அதன் விளைவுகளும்' என்ற தலைப்பில் உரையாற்றுவார். (ஐ-ம)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 24

"முதியோர் எம் குடும்பத்தின் சொத்துக்கள்" என்ற தலைப்பிலான போயா கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 30 மணியளவில் (புதிய நேரம்) யாழ்ப்பாணத்தில் உள்ள 'அகவொளி' குடும்பவள துணை நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற அதிபர் கா. கணேசதாசன் கருத்துரை வழங்குவார். [-ம]

# உசன் மகாவித்தியாலயத்தின் கட்டடத்தை மீளத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 24

இராணுவத்தினரின் பாவனையிலுள்ள உசன் இராமநாதன் மகாவித்தியாலய கட்டடம் மற்றும் விளையாட்டுமைதானம் போன்றவற்றை மீண்டும் பாடசாலையிடம் ஒப்படைப்பதுடன் தடை செய்யப்பட்டுள்ள மேற்படி பாடசாலைக்குச் செல்லும் வீதியையும் திறந்துவிட ஆவன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இவ்வாறு உசன், மிருசுவில் பகுதி மக்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் மகஜர் ஒன்றின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1996 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் உசன் இராமநாதன் மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவுக் கட்டடமும்விளையாட்டுமைதானமும் பாதுகாப்புப் படையினரின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனால் 300க்கு மேற்பட்ட மாணவச் சிறார்களின் கல்வி, மனநிலை பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்கள் கட்டட வசதியின்றி மர நிழலில், கல்வி கற்கும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையின் விளையாட்டு மைதானம் படையினரின் தேவைக்காகவும், பயிற்சி நிலையமாகவும் உபயோகிக்கப்பட்டு வருவதனால்மாணவர்களின் ஆரோக்கியம், உடல் உளவளர்ச்சி போன்றவை பாதிக்கப்பட்டுள்ளதுடன் அத்தியாவசியமான தேகப்பயிற்சியும் மெய்வல்லுநர் பயிற்சிகள்—விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனால் ஏற்பட்ட பின்னடைவும் பாதிப்புகளும், தாக்கங்களும் மீளப் பெற முடியாதவை என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

பாடசாலைக்குச் செல்லும் வீதி தடை செய்யப்பட்டுள்ளதால் கடந்த நான்கு வருடங்களாக மாணவர்கள், பொதுமக்கள், விவசாயிகள் ஆகியோர் போக்குவரத்தில் சிரமத்தை அனுபவித்து வருகின்றனர்.

இப்படி அந்தமகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ-5-9-10

## நாளை

ஐப்பசி 8

திங்கட்கிழமை

திதி: பிரதமை

பின் இரவு 1.25 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

பிற்பகல் 2.24 வரை

சுபநேரம்: 12.02—1.32

ராகுகாலம்: 7.32—9.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

கொடியவர்கள் பயத்தினால் பணிவார்கள். நல்ல மனிதர்களைக் கட்டுப் படுத்தும் சக்தி அன்புக்கே உண்டு.

அரிஸ்டோட்டில்

## ஒபடகே பார்வையிட்டார்

யாழ். நகரில் கே. கே. எஸ் வீதியில் அமைந்திருக்கும் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடுவப் பணியகத்தை வடக்கு—கிழக்கு மாகாணப் புனர்வாழ்வு. புனரமைப்பு அதிகாரசபைத் தலைவர் ஒபடகே நேற்று சனிக்கிழமை காலை பார்வையிட்டார்.

இந்தக் கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்ட பின்னர் முதற்தடவையாக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் சகிதம் அதிகாரசபைத் தலைவர் கட்டடத்தைப் பார்வையிட்டார்.

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சண்முகநாதன் யாழ். பல. நோ. கூ சங்கத்தலைவர் சி. வி. கே. சிவஞானம் மற்றும் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அதிகாரசபைத் தலைவர் தற்போது புனரமைக்கப்பட்டு வரும் வீரசிங்கம் மண்டபக் கட்டடப் பகுதியையும் நேரில் சென்று பார்வையிட்டார். (ஐ-17)

## தென்னங்கன்று வழங்கப்படும்

தென்மராட்சி, ஒக். 24

பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களில் தென்னை மீள் நடுகைத் திட்டத்தின்கீழ் வீட்டுத் தென்னந் தோட்டத்திற்கென் தென்னங்கன்றுகள் அடுத்த மாதம் வழங்கப்படவுள்ளன.

பளை தென்னைப் பயிர்ச் செய்கை சபைத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட 7 ஆயிரம் தென்னங்கன்றுகளே வழங்கப்படவுள்ளன.

தேவைப்படும் தென்னங் கன்றுகளின் விவரங்கள் பொதுமக்களிடமிருந்து கிராம அலுவலர்களால் சேகரிக்கப்படுகின்றன. (ஐ-117)

## விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினால் அடுத்த மாத முற்பகுதியில் நடத்தப்பட விருக்கும் பொதுக் கலைமாணி மற்றும் வணிகமாணிப்பட்டங்களுக்கான பகுதி I, II பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு அறிவித்துள்ளது. [ஐ-7-10]

## எதிரொலி..

- இடியன் -

● கொழும்பு மாநகரம தமிழருக்கு ஒரு திறந்த வெளிச்சிறைச்சாலையாக விரைவில் மாறும் என மேல் மாகாண சபை உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

★ இப்போது அது எப்படி இருக்கிறதோ?

● கொழும்பிலே தமிழர்கள் கைதாவது குறித்து, தொலலை தவிர்ப்புக்குழு விரைவிலே ஆராயுமாம்.

★ ஆராயும்; அறிக்கை சமர்ப்பிக்கும்; விரைவில், நடவடிக்கை எடுக்கப்படும்'' என்ற பதிலைப் பெற்றுக் கொள்ளும் ...... தொல்லைகள் தொடரும் அவ்வளவு தானே!

● கொட்டாஞ்சேனைப் பகுதியில் தினமும் மாலை வேளையிற் சோதனை!

★ கொட்டாஞ்சேனையைக் "கொட்டியாச்சேனை" என நினைத்துக் கொண்டார்களோ?

● கொழும்புக்குச் சென்று விமானத்திலே திரும்பி வரும் யாழ் மக்களுக்கு, நிவாரணம் வழங்கப்பட மாட்டாதாம்!

★ நிவாரணப் பொருள்கள் கப்பலில் வருவதால் நிவாரணத்தைப் பெறுபவர்களும் கப்பலில் தான் வர வேண்டுமாக்கும்!

● வன்னியில் இராணுவம் ஆரம்பித்த போர் நடவடிக்கைக்குத் "திருப்பு முனை" எனப்பெயர் சூட்டப்பட்டுள்ளது.

★ வலிமை குறைந்தால் அது திரும்பு முனையாகி விடும்!

● சம வாய்ப்புச் சட்ட நகல் நாடாளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட மாட்டாது!

★ வாய்ப்பைப் பற்றிப் பேசுவதற்கே வாய்ப்பூட்டுப் போடப்பட்டு விட்டதோ?

● விரிவான அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தை அமெரிக்க செனட் நிராகரித்து விட்டது.

★ பில் கிளின்ரனின் சொல் கிழிந்தது எனக் கொள்ளலாமோ......?

● புலிகளுடன் பேசுவதைப் பற்றிச் சிந்திப்பதையே நிறுத்தி விட்டதாக "இந்து" நாளிதழ் பேட்டியில் ஜனாதிபதி கூறியுள்ளார்.

★ போர் முனையிலே சாவதற்கும் படுகாயமடைவதற்கும் கிராமப்புறத்து அப்பாவிச் சிங்கள இளைஞர்களும், புலிகள் என்ற பட்டத்தை ஏற்பதற்கு எறிகணையாலும் விமானக் குண்டு வீச்சாலும் பாதிக்கப்படும் தமிழர்களும் தயாராயிருக்கும போது, பேச்சுவார்த்தையைப் பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை என்று ஜனாதிபதி எண்ணியிருக்கலாம் ...!

# மகாகும்பாபிஷேகச் சிறப்பிதழ்தொடர்...

ஆலய வரலாறு...

ஒரு புறம் விளங்கி அடியார்களைப்பிரமிக்கச் செய்கின்றன.

லிங்கதாரிகளான வீரசைவமரபினர் கடந்த பல ஆண்டுகளாக இங்கு நியமம் தவறாது பூசை செய்து வருகின்றனர். அம்மரபில் திரு. சிவசுப்பிரமணியம் சிவகரன் இன்று பூசகராக விளங்குகிறார். முன்பு பூசகராக இருந்த தகப்பனார் தற்போது கதிர்காமம் போய் அங்கும் பிள்ளையாரிடமே பூசகராக இருக்கின்றார்.

1994 இல் பங்குனித்திங்களில் மிகப் பிரமாண்டமான நவகுண்டயாகமும் சங்காபிஷேகமும் இடம்பெற்றது.

சிவப்பிரம்மஸ்ரீசாமி.ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்தலைமையில், இன்று(24.10.99) ஞாயிறு பூரணை தினமும் ரேவதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபவேளையான காலை 6.09 மணிமுதல் 7.20 மணிவரையில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

உடுவில் வாழ் மக்களுடன், இந்த நாட்டில் அமைதி, சமாதானம் வேண்டும் சகலருக்கும் பஞ்சமுக விநாயகர் அருள் கிடைப்பதாக

புதுமையான விநாயகரைப் பிரார்த்தித்து புதுவாழ்வு காண்போம்;

ஆசிரியமணி- எம். எஸ். ஸ்ரீதயாளன்--

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 4 மணிக்கு யாக பூசை, மகாபூர்ணாகுதி, தீபாராதனை, ஸ்தூபி அபிஷேகம், பிரதான கலசம் வீதிப்பிரதக்ஷணம் நடைபெற்று காலை 6 மணி 9 நிமிடத்துக்கும் 7 மணி 20 நிமிடத்துக்குள்ளும் வரும் சுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகமும், தசதர்சனம் எஜமான் அபிஷேகம், ஆசீர்வாதம், குருமார் சம்பாவனை, மகா அபிஷேகம் ஆகியன நடைபெறும்.

துயர் துடைத்த...

பக்தியோடு பேணப்படுதல் அவசியமாகும். உடுவில் திருவூர் மிகவும் பழைமை வாய்ந்த திருவூர். இப்பகுதியில் வாழுகின்ற பெரும்பான்மையான மக்கள் சைவசமயத்தவர்கள். கல்வியிலும் சமுதாய நலன்களைப் பேணுவதிலும் ஆர்வமுடையவர்கள். திரிசுரன் என்ற அசுரனை அடக்கித் துன்பத்தில் வாழ்பவரின் துயர்தனைத் துடைக்கத் தும்பிக்கையான் எடுத்த பஞ்சமுக வடிவத்தைப் பிரதிஷ்டை செய்வது போற்றுதற்குரிய காரியமாகும். ஆலயங்கள் மனித ஆத்மாவை வளப்படுத்தும் அற்புத ஸ்தாபனங்கள். எனவே குடமுழுக்கு வைபவத்தோடு அறப்பணிகளை ஆலய நிர்வாகிகள் ஏற்படுத்திப் பேணவேண்டும்.

பஞ்சமுக விநாயகர் எம் பாவ வினைகளை நீக்கி எம் மண்ணுக்கு விடிவுதர இத்திருநாளில் பக்தியோடு அனைவரும் வணங்குவோமாக.

— ஆறு. திருமுருகன்

# தகவல் தொழில் நுட்ப கற்கை நெறி விரைவில்

வலிகாமம் தெற்கு, ஒக். 24

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கிலமும் தகவல் தொழில் நுட்பமும் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

ஆங்கிலம், தகவல் தொழில் நுட்பம் (கணனி பயிற்சி) ஆகியவற்றின் முக்கியத்துவம் இன்று மாணவ சமூகத்தால் உணரப்பட்டுள்ளது. உலகமயமாதலுக்கு முகம் கொடுக்க இக் கற்கை நெறி அவசியமானது. தகவல் தொழில்நுட்பக் கல்வி கூடிய மூலதன செலவுடன் தொடர்பு பட்டது. யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனம் இலவசமாக நடத்தும் சகல கற்கை நெறிகளிலும் ஆங்கிலமும் தகவல் தொழில்நுட்பமும் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன பயிற்சி இயக்குநர் ரி. இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் நவம்பர் முதலாம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களை 'இலக்கம் 78, பலாலி வீதி' யில் உள்ள மேற்படி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ152)

## படைத்தரப்பு விளக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 24

குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலையை இயக்குவதற்காகமின்மாற்றி அமைப்பதற்கு படையினர் எந்த வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்று பலாலிப் படைத்தலைமையக அதிகாரி ஒருவர் விளக்கம் அளித்துள்ளார்.

அந்தத் தொழிற்சாலை வளவில் முன்பு மின்மாற்றி இருந்த இடத்தில் மீண்டும் அதை அமைக்க பாதுகாப்புப் பிரச்சினை உள்ளது என்றும் --

அதன் காரணமாக தொழிற்சாலைக்கு முன்புறம் மின்மாற்றியை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் — அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-3)

# வாழ்த்துகின்றோம்

யா / ஏழாலை மேற்கு

சைவ சன்மார்க்க வித்தியாசாலை

1999 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

| பெயர் | புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|
| மா. யூட்டெனிக்ஸ் | 155 | 55 |
| ம. ஜெயாலயன் | 125 | 558 |
| சி. சுரேஜன் | 118 | 810 |

இவர்களையும் வெட்டுப் புள்ளிக்கு மிகக் கிட்டிய புள்ளிகளைப் பெற்ற ஒன்பது மாணவர்களையும் உளமாரப் பாராட்டுகின்றோம்.

அத்துடன் இம்மாணவர்களை ஊக்குவித்த அதிபர் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

நன்றி.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(70286)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக். 24

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலகம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட அனுசரணையுடன் யாழ். பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப்படுத்திய ஆடை தைத்தற் பயிற்சி நெறியின் நிறைவு விழாக் கண்காட்சி இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலய மண்டபத்தில் மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் அ. சக்திவேல் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க)

# விலங்கு வேளாண்மை பயிற்சி நெறி

தென்மராட்சி, ஒக். 24

பளைப் பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத்தினர் 'கெயர்' நிறுவனத்தின் அனுசாரணையுடன் பிரதேச விவசாயிகள், பண்ணையாளருக்கான விலங்கு வேளாண்மையும் பயிர்ச்செய்கையும்' பற்றிய பயிற்சி வகுப்பினை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்திலும் நேற்று முன்தினம் முகாவில் பாடசாலையிலும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன,

பிரதேச கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் க. காசிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இப் பயிற்சி வகுப்பில் 'கெயர் நிறுவன திட்டப் பணிப்பாளர்,தென்மராட்சி கால்நடை வைத்தியர் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகின்றனர்.' (ஐ-117)

# சாயி சமித்தியில் ஆன்மீக நிகழ்ச்சி

கொழும்புத்துறை, ஒக். 24

திருநெல்வேலி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இன்று காலை 9 மணி முதல் பூரணை தின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காயத்திரி மந்திர ஜெபம், இலட்சார்ச்சனை, தியானம் பஜனை, சொற்பொழிவு என்பன இடம்பெறவுள்ளன.

(க-30)

★ ★ ★

கொழும்புத்துறை உப தபால் நிலையத்தில் இன்று மாலை 4.30 மணி தொடக்கம் பூரணை தின சாயி பஜனை, கூட்டுவழிபாடுகள் என்பன கொழும்புத்துறை சாயி சமித்தியின் ஆதரவில் சமித்தியின் தலைவர் திருமதி எஸ். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

(ஐ-30)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தடியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சத்தியசாயி பகவான் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்குத் தொண்டர் சி. நவரத்தினம் தலைமையில் பஜனை, கூட்டுவழிபாடுகள் ஆகியன நடைபெறும்.

நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறும். [ஐ-30]

# பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஒக் 24

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பரீட்சைகள் பிரிவினால் 1997/98 ஆம் கல்வி ஆண்டு மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கலைமாணி, வணிகமாணிப் பட்டங்களுக்கான பகுதி I, II பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிலைத் திறப்பு விழாச் சிறப்பு மலர்

(ஐந்தாம் பக்கத் தொடர்ச்சி)

## ஸ்கந்தா ஆசிரியரின் செய்தி

வரலாற்றுப் பெருமை மிக்க ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஸ்தாபகரான ஒப்புரவாளர்ஸ்ரீமான் கந்தையா உபாத்தியாயர் அவர்களின் திருவடிகளுக்குக் கல்லூரி ஆசிரியர்கள் சார்பில் வணக்கம் செலுத்துகின்றேன். கந்தரோடைக்கிராமத்தில் உலகம் வியக்க உயர்ந்து நிற்கின்ற உன்னதக் கல்லூரியாகி ஸ்கந்தவரோதயக் கல்லூரியை நூற்றிஐந்து ஆண்டுகளுக்கு முன்தன் தூய சிந்தையால் நிறுவியவர் இவர்.

ஈழத் திருநாட்டின் ஈடு இணையற்ற பல்லாயிரம் அறிஞர்களை உருவாக்கிய இன்றும்சைவப்பண்பாட்டுப் பாரம்பரியங்களோடு இக்கல்லூரி சிறப்புற்று விளங்குகின்றது தினமும் கல்லூரி மாணவச் செல்வங்கள் கல்லூரிக் கீதம் இசைக்கின்ற போது ''கந்தையவள்ளலின் சிந்தையில் எழுந்த கல்லூரி'' என்று பிரார்த்தித்து வருகின்றனர்.

இப்புண்ணியப் பணிகளை உருவாக்கிய புனிதரான ஸ்தாபகரைக் கொழும்பு பழையமாணவர் சங்கம் நன்றியோடு நினைந்து மிகவும் அழகான உருவச் சிலையைக் கல்லூரி வளாகத்தில் இன்று நிறுவுவது வரலாற்று நிகழ்ச்சியாகும்.

கொழும்பு பழைய மாணவ சங்கத்தின்நன்றி மறவாத நற்பணியை வாழ்த்திப் போற்றுகின்றேன்.

ஆறு. திருமுருகன்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி,

கந்தரோடை,
சுன்னாகம்.

## பழைய மாணவர் சங்க உப-தலைவரின் ஆசியுரை

கிராமப்புற மக்களின் அறிவுக்கண்களைத் திறக்கும் மகத்தான பணிக்குத் தன் உடல் பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த மகான்; யாழ்ப்பாணத்துக் கல்வித்துறை முன் னோடிகளும் சிறப்பிடம் வகிக்கும் பெருமகன்.

சைவப்பிள்ளைகள் தம் சைவப்பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணிக்கொண்டே மற்றுலகின் அறிவுச் செல்வத்தையும் சேர்த்து இசைவாக்கம் பெறவேண்டும் எனத் தீர்க்கதரிசனத்துடன் செயற்பட விட்கல்மான்; எண்ணிய எண்ணியாங்கு எய்திய திண்ணிய நெஞ்சன் - என்றெல்லாம் பலதுறை மக்களாற் பல்வேறு சந்தர்ப்பங்களிற் பாராட்டப்பெற்ற பெரியார் கந்தரோடை சின்னத்தம்பி கந்தையா ஆவார். இவரது தன்னலமற்ற தனிப்பெரும் சேவையை என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரும் வகையில், அவர் கருவாக்கி, உருவாக்கிய உயர்வாக்கிய கந்தரோடை ஸ்கந்தவரோதயக்கல்லூரி முன்றலில் அன்னாரின் திருவுருவச் சிலையை நிறுவியுள்ள கொழும்புகிளை பழைய மாணவர் சங்கத்தினரை மனமாரப்பாராட்டுகின்றேன். உளமார்ந்த நன்றியையும் தெரிவிக்கின்றேன்.

கல்வியிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட சமுதாயம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்ற அவருடைய உன்னதமான இலட்சியத்தை என்றென்றும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தையும் எழுச்சியையும் ஊட்டி வளர்க்கும் சின்னமாகவும் இச்சிலை திகழும் என நம்புகின்றேன்.

சி. சிவசரவணபவன்
(உப - தலைவர்
பழையமாணவர் சங்கம்).

கந்தரோடை,
சுன்னாகம்.

# அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு ஒத்திவைப்பு

25-10-99 அன்று நடைபெறவிருந்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர்சங்கத்தினர் நடத்தும் அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 17-11-99 -க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்,

தலைவர் (அதிபர்)
மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
தெல்லிப்பழை.

(70280)

# மரண அறிவித்தல்

## திருமதி உருத்திரா கந்தசாமி

(மாதகல்)

மாதகல் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி உருத்திரா கந்தசாமி அவர்கள் 23 - 10 - 99 சனிக்கிழமை அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மாதகல் கந்தசாமி (முன்னாள் பீக்கிங் வானொலி ஒலிபரப்பாளர்) அவர்களின் மனைவியும் க. ஞானசீலன் [மக்கள் வங்கி, கன்னாதிட்டி] அவர்களின் அன்புத் தாயாருமாவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் 24-10-99 காலை 9மணிக்கு தகனக்கிரியைக்காக மாதகல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. ஞானசீலன்
(மகன்)

உருத்திர கிரி,
பிள்ளையார் கோயிலடி, மாதகல்.

[70283]

## வாழ்த்துகின்றோம்

வலய மட்ட உதைபந்தாட்டத்தில்
முதலாம் இடத்தைப் பெற்ற
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலய
18 வயது அணியையும்
புலமைப்பரிசில் பரீட்சையில் 157 புள்ளிகளைப்
பெற்ற மாணவன்
அல்பேட் யோசேப்பையும்
வாழ்த்துகின்றோம்.

சக மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பா.அ.ச. உறுப்பினர்கள்.
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.
யாழ்ப்பாணம். (70251)



பண்டத்தரிப்பில்

## சிவாஸ் ஸ்ரூடியோ அன் வீடியோ பாதணிகள் விற்பனை நிலையமும்

அத்துடன்
தொலைத்தொடர்பு சேவையையும்
ஆரம்பித்துள்ளது.

தொலைபேசி இலக்கம்:
உள்நாடு 070 – 212574
வெளிநாடு 0094-70-212574

கிளைகள்:

1. வட்டுக்கோட்டை, பிரதான வீதி,
2. சித்தங்கேணி, பண்டத்தரிப்பு.

(70248)



## பொருள்கள் விற்பனைக்கு

கீழ்க்கண்ட பொருள்கள் விற்பனைக்கு உள்ளன.

- அலுமாரி – 2
- கிடாரம் – 1
- Office Table – 2
- Single Bed – 2
- Floor Polisher (Hoover) 1
- Vaccum Cleaner (National) – 1
- Gas Cylinder – 2
- Welding Plant (Elk Arc) – 1
- Compressure AirTank – 1
- 200 Amp M. C. C. B. – 1
- 7/ 064 Wires
- Two, Three Core Rubber Insulatəd Wires,
- 2 Ton Puller
- 15 H. P. Three Phase Motors 3

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பூபாலசிங்கம்
லக்ஷ்மி களஞ்சியம்
நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (70234)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 11 – 05 – 1934



ஆண்டவன் அடியில் 04 – 11 – 1998

### கந்தையா நற்குணம்

(முன்னாள் உத்தியோகத்தர் புத்தளம் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

திதி: 24 – 10 – 1999

"குஞ்சு" என்று அழைக்கும் குரல்
இன்னும் ஒலிக்கின்றதே!
ஆண்டு ஒன்று என்ன நூறு சென்றாலும்
ஆறாது என் மனத்துயர்.
என் தெய்வமே! என்றுமே என் நெஞ்சம்
உங்களையே நினைந்துருகும்.

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி கனகம்மா நற்குணம்
(மனைவி)

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(70020)

## மகளிருக்கு பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ் மகளிர் ஆய்வு, அபிவிருத்தி நிறுவனத்தினால் சண்டிலிப்பாய், சாவகச்சேரி பகுதிகளில் பெண்களுக்கான 16 நாள் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

'யாழ். மகளிர் ஊக்குவிப்பாளர்களை சிறு முயற்சியிலும் சுயதொழில் வாய்ப்பிலும் ஆற்றல் படைத்தவர்களாக உருவாக்கல்' என்னும் தலைப்பில் இந்தப் பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன.

சண்டிலிப்பாயில் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமான பயிற்சி நவம்பர் 11 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரியில் நவம்பர் 25 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 5ஆம் திகதி வரையும் இந்தப் பயிற்சிகள் நடைபெறவுள்ளன.

இரு இடங்களிலும் 60 பெண்கள் இப் பயிற்சிகளில் கலந்து கொள்கின்றனர்.

(ஐ–5–9)

## கோழி வளர்ப்பு தொடர்பான பயிற்சி

கொக்குவில், ஒக். 24

கோழி வளர்ப்புப் பற்றிய பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமையும் மறுதினம் செவ்வாய்க்கிழமையும் நாவலர் வீதியில் அமைந்துள்ள கால்நடை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது

இப்பயிற்சி நெறியில் பங்கு கொள்ள விரும்பும் இரு பாலாரையும் மேற்படி நிலையத்தில் உடனடியாகத் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–69)

## கிட்டு பூங்கா துப்புரவுப் பணி ஆரம்பம்

வலி. வடக்கு, ஒக். 24

நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டு பூங்கா துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக யாரும் கவனிப்பாரற்ற நிலையில் இப் பூங்கா இருந்துவந்தது.

தற்போது யாழ். மாநகர சபையினர் இப் பூங்காவைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

(ம–86)

## நிவாரணம் விநியோகம்

உரும்பிராய் ஒக். 24

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் மீளக் குடியமர்ந்தோருக்கான 79 'ஏ' 'பி' ஆகிய புள்ளிகளுக்குரிய நிவாரணம் வழங்கப்படுகிறது.

25 ஆம் திகதிக்கு முன்பு தமக்குரிய உலர் உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ளும்படி பாவனையாளர்கள் கேட்கப்படுகின்றனர்.

இந்த நிவாரணப் பொருள்களில் பால்மா பைக்கற் பின்னர் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–154)

## ருபெல்லா தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக் 24

ருபெல்லா (ஜேர்மன் சின்னமுத்து) வைரசினால் ஏற்படும் பிறவி ருபெல்லா நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளிலும் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியிலும் ருபெல்லா வக்சின் வழங்கப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெறும் ருபெல்லா வழங்கும் நிகழ்வைத் தொடர்ந்து இது தொடர்பான கருத்தரங்கும் மேற்படி இடங்களில் நடத்தப்படவுள்ளன. (ஐ-5)


## இடம்மாற்றம்

சிவன் கோயில் வடக்கு வீதி, S. R. S இல் இயங்கி வந்த சிவன் நகைத் தொழிலகம் எதிர்வரும் 25-10-99 முதல் காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தில் புதுப் பொலிவுடன் ஆரம்பமாகவிருக்கிறது என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நா. சிவராசா (ராசன்)
உரிமையாளர்.

(சி/9445)


## யா/சென்ற் ஆன்ஸ் றோ. க. த. க. பாடசாலை,

மானிப்பாய்.

### ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை-99

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

| | |
|---|---|
| செல்வி வி. நகோமி ஷைலா | 141 |
| செல்வன் பு. பிரகாஷ் | 137 |
| செல்வன் அ. சர்மிலன் | 137 |
| செல்வன் சி, ஸ்ரீபாலரமணன் | 126 |
| செல்வி ஜெ. ஜெயவாணி | 119 |
| செல்வி நா. சிந்துஜா | 118 |

இந்த மாணவர்களை அயராது ஊக்குவித்த அதிபர் சிஸ். M. T. லடிஸ்லாஸ் அவர்களையும் கற்பித்து வழிகாட்டிய ஆசிரியைகள் திருமதி கி. உதயகுமார், திருமதி பு. முத்துலிங்கத்தையும் ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம்.

— பெற்றோர்

(சி/9433)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ இணுவில் இந்துக்கல்லூரி
5 ஆம் தர
புலமைப் பரீட்சைப் பெறுபேறு - 1999

திறமைச் சித்தி பெற்றோர்

| | |
|---|---|
| டல்சினி கிருபானந்தன் | 158 |
| மாதங்கி கணேசலிங்கம் | 152 |
| மகாராசா கபிலன் | 144 |
| ஞானசபேசன் யதுர்சன் | 141 |
| பாஸ்கரன் சுதன் | 134 |
| சாம்பவி பாலசுப்பிரமணியம் | 122 |
| சோபியா தர்மலிங்கம் | 121 |
| இராமச்சந்திரன் கீர்த்தனன் | 119 |
| நிரோஜா தங்கராசா | 118 |

மேற்படி மாணவர்களையும் அவர்களைப் பரீட்சைக்குத் தயார் நிலைப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனமுவந்து பாராட்டுகின்றோம்.

பெற்றோர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கர்,
பழைய மாணவர் சங்கம்,
இணுவில் இந்து கல்வி அபிவிருத்தி
நம்பிக்கை நிதியம்.

யா/ இணுவில் இந்துக் கல்லூரி
சுன்னாகம். (70250)

## 72 ஆவது ஜெயந்தி தின விழா

24 10 99



ஸ்ரீ முருகன் ஆச்சிரமம்

### அருள் மார்க்கண்டு சுவாமிகள்

72 ஆவது ஜெயந்தி தின விழாவான (24 – 10 – 99 இன்று சுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்றிருக்கும் முருகன் அடியார்கள் வெகு சிறப்பாக மானிப்பாய் ஸ்ரீ முருகன் அருள் நிலையத்தில் கொண்டாடுகின்றார்கள்.

– முருகன் அடியார்கள்

மானிப்பாய். (70201)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி புறொயி லர்மொத்தமாகவும் சில்லறை யாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்ய இலவசம். தொடர்பு இல. 31, மான் பாடசாலை வீதி, [கண்ணா வீடியோ சென்ரர் வளவு]. உடுவில், சுன்னாகம். விதானை வளவு, பொன் னாலை வீதி, மானிப்பாய், (70151)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தட்டுப்பாடின்றி தினமும் காலை 7 மணி தொடக்கம் (பாதிக்கோழி உட்பட) சுகாதாரமுறைப் படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம், நியாயமான விலை, நுட்பமான நிறுவை சுறுசுறுப்பான சேவை அத் துடன் அடைமுட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (70103)

பினிஷர் – மாஷ் ஊட்டப் பட்ட நிறை கூடிய புறோயி லர் கோழிகள் விற்பனைக்கு உண்டு சுத்தம் செய்து பாதிக் கோழியாகவும் பெற்றுக் கொள்ளலாம். தினமும் எந் நேரமும் உடன் தொடர்பு கொள்ளவும். 40/6, புகை யிரத கிழக்கு ஒழுங்கை, கந் தர்மடம். (செல்வநாகபூஷணி அம்மன் கோயில் அருகில்) (70190)

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. தின மும் சுத்தம் செய்து வேண் டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (70137)

### சித்தி விநாயகர் சோதிடம்

சாதகம் எழுத தீர்க்க மான பலன் அறிய, விவாக தாமதம் கிரக தோஷத்திற்கு சரியான பரிகாரம் காண, சகல விதமான யந்திரங்களுக் கும் நாடுங்கள்: கொழும் பில் 22 வருட அனுபவம் வாய்ந்த சோதிடர் விஸ்வப் பிரம்மஸ்ரீ மா. தங்கவேல், 9, டச்சு வீதி, சாவகச்சேரி. (70183)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

குறித்த தொகைப் பணம் கடந்த புதன்கிழமையன்று [20–10–99] புளியங்கூடல் மாரியம்மன் கோயிலுக்கும் கைத்தனைக்கும் இடைப் பட்ட வீதியில் கண்டெடுக் கப்பட்டது. உரியவர் சுருவில் உபதபாலகத்தில் அலுவலக நேரத்தில் தகுந்த ஆதாரத் துடன் பெற்றுக் கொள்ளவும். (70258)

### தவறிவிட்டது

புனித அந்தோனியார் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த அனற் மரிய கொளற்றா என் பவரது விசேட அடையாள அட்டை 05-10-99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் அன்ரனி றேட்ஸ், (பஸ்நிலையம் அருகில்) யாழ்ப் பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (70217)

745, ஐந்து சந்தி, நாவலர் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச்சேர்ந்த செல்வன் எதிர்வீரசிங்கம் பிரகலாதன் என்பவரின் விசேட அடை யாள அட்டை (இல. 0901025445) 14 – 10 – 99 அன்று யாழ். நகரில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் கள் மேற்கண்ட முகவரியில் ஒப்படைக்கவும். [70240]

பலாலி தெற்கு வயா விளான் என்னும் முகவரி யைச் சேர்ந்த உதயகுமார் இன்பராணி என்பவரது விசேட அடையாள அட்டை (0907017120) 18-10-99 இல் பரமேஸ்வராச் சந்திக் கும் இலுப்பையடிச் சந்திக் கும் இடையில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R. T. K. இரு பாலை அல்லது வேல் வர்த் தக நிலையம், ஸ்ரான்லி றோட் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (70266)

### விற்பனைக்குண்டு

London Piano (சிறு திருத்தங் களுடன் Model No 112841, Octopad Seven Drums with Pedal Model No D D 50, Yamaha விற்பனைக்குண்டு. தொடர்பு: A B Asbury Church Lane, Araly North (70147)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம், தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (70216)

### விற்பனைக்கு

வளர்ப்புக்குரிய சேவல் கள், முட்டை இடும் பருவத் திலுள்ள பேட்டுக் கோழிகள், விறாத்துக்குரிய கோழிக் குஞ்சுகள், இந்திய இன முருங்கைக் கன்றுகள் மற்றும் அடைமுட்டைகள் பதிவு செய்தும் பெற்றுக் கொள்ள லாம் 40/6, புகையிரத கிழக்கு ஒழுங்கை, கந்தர் மடம். [70191]

கோல்ட்பி(f)ஷ்மீன்தொட்டி களுக்குரிய மோட்டர்கள், அழகு சாதனப் பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு களுக்கு: ஜ அருளானந்தம். இல. 17, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு. யாழ்ப்பாணம். தினமும் 12 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும். [70208]

12 அடி நீளமும் 4 அடி அக லமும் உள்ள கண்ணாடி அலு மாரி எம்மிடம் விற்பனைக்கு உண்டு. திங்கள், புதன் ஆகிய நாள்களில் காலை 8. 30 – மாலை 5. 30 வரைதொடர்பு கொள்ளலாம். தொடர்புக ளுக்கு இல. 158, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (70220)

நல்ல நிலையிலுள்ள நீர் இறைக்கும் இயந்திரம்[Willy's —12], நாஷனல்|பனசோனிக் பொக்ஸ் (50w – 12'') ஆகி யவை உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:— மா. வகேஸ்வரன், தேவாலய வீதி, சங்கானை. (70244)

Pure Doberman Pincher (டோமன்) நாய்க்குட்டிகள், மற்றும் Fincbers குருவிகள் விற் பனைக்கு உண்டு. 10 மணிக்கு தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண் டிய முகவரி: இல. 169, மருத் துவ பீடம் முன்பாக, ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி. (70238)

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு தொடர்பு: 37/2 கச்சேரி- நல்லூர் றோட், Blue Ribon Hotel அண்மையில், யாழ்ப்பா ணம். வாடிக்கையாளர் களுக்கு விசேட விலைக் கழிவு உண்டு. (70263)


## தைத்த ஆடைகள்

தீபாவளியை முன்னிட்டு எம்மிடம் பெருமளவில்
சிறுவர், பெண்களுக்கு ஏற்ற ஆடைகள் உள்ளன.
வியாபாரிகளுக்கு கழிவு உண்டு.

பிரியா காமன்ற்ஸ் இல 207, பலாலி வீதி, கோண்டாவில்.

[70268]


# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக். 24

கரவை தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆல யத்தில் வள்ளியமமன் திரு மணப்படனமும் கந்தபுரா ணப் பூர்த்தியும் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளன.

காலை 6 மணிக்கு பூசை ஆரம்பித்து கந்தபுராணப் படனம் தொடரும்.

பிற்பகல் 4 மணிக்கு வசந்த மண்டபப்பூசைநடைபெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 24

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ் வரன் ஆலயத்தில் இன்று ஞாயிறு காலை 8 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (க)

★ ★ ★

கட்டுவன் மயிலிட்டி தெற்கு வர்த்தலை விளான் அந்தியகால சகாய நிதிச் சங் கம் நடத்தும் சர்வதேச சிறு வர், முதியோர் தினவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மேற்பிரிவு மண்டபத்தில் சங்கத் தலை வர் க. தர்மநாயகம் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலக நாயகம் பிரதம விருந்தின ராகக் கலந்து கொள்வார். (க)

★ ★ ★

தரம் 10, 11 இல் மனை யியல் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கும்செயல மர்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் வலிகாமம் கல்வி வலயத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி யில் நடைபெறும். (ஐ-152)


## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை -1999

யா/முத்துத்தம்பி ம. வி. மாணவன்
செல்வன் மகாதேவன் விஜிதரன்
139 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்துள்ளமையையிட்டு
மாணவனையும் அவரை ஊககுவித்த
அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(70265)



## விநாயகர் புடைவை அகத்தினரின்
## தீபாவளி
## சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சாறிவகைகள், பஞ்சாபி சூட்வகைகள் மற்றும் இன்னோரன்ன புடைவைத் தினிசுகளும் சிறப்புத் தள் ளுபடி விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின் றன. வாருங்கள்! வந்து பாருங்கள் சிறப்புத் தள்ளு படி விலை எப்படியென்று அப்போதுதான் உண்மை புரியும், இந்தச் சலுகை தீபாவளி வரை மட்டுமே. உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்

62 A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

[சி/9461]


## வாழ்த்துகின்றோம்



தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில்
பிரதம எழுதுநராகப் பணியாற்றும்

**சின்னத்தம்பி இராமச்சந்திரன்** அவர்கள்

கௌரவ நீதி அமைச்சின் செயலாளரினால் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு கடந்த 15-9-1999 இல் யாழ் நீதிமன்ற பதில் நீதி வான் க. கேசவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமைக்காக அவரைப் பாராட்டிவாழ்த்து கின்றோம்.

அம்பாந்தோட்டை, புத்தளம், மன்னார், யாழ்ப் பாணம் ஆகிய செயலகங்களில் கடமையாற்றி தற் போது தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமை யாற்றும் இவரின் சமூகப் பணி மேன்மேலும் சிறப் புற்று விளங்க பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி.

(சி/9460)


## புதுக்கடைத் திறப்பு விழா

வாடிக்கையாளரின் நன்மை கருதி தமது சேவையினை
மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
**ரட்ணாஸ் ஸ்தாபனத்தாரின்**
இணை நிறுவனமாக
**சிறி ரட்ணாஸ்**
**மோட்டோஸ் & வைண்டிங்**
நிறுவனமானது இன்று (24-10-99) காலை 8.00 மணிக்கு
K. K. S. வீதி, சுன்னாகம்
எனும் முகவரியில் மிகவும் கோலாகலமாக ஆரம்பிக்கப்படவுள்ளது
என்பதனை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
அறியத் தருவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

ரட்ணாஸ்

வெலிங்டன் சந்தி,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (70241)

## வாழ்த்துகின்றோம்

எமது ஆலயத்தை ஆகம விதி முறைக்கமைய கட்டட நிர்மாணம் செய்தவரும் சிறந்த சமூகத் தொண்டருமாகிய கோண்டாவில் கிழக்கு ஆலடி வீதியைச் சேர்ந்த

### திரு. கந்தன் தியாகராசா
அவர்கள்

மாவட்ட நீதிவான் உயர்திரு. இ. த. விக்கினராஜா முன்னிலையில் மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றதை மனதாரப் பாராட்டி அவரின் சமூக – தெய்வீகப் பணிகள் மேலோங்க ஆசீர்வதித்து வாழ்த்துகின்றோம்.

தியாக கெங்காதரக் குருக்கள் குடும்பம்
கற்பக விநாயகர் தேவஸ்தானம்,
ஈவினை, புன்னாலைக்கட்டுவன்.

[70231]

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி திலகவதி லோகநாதன்

மலர்வு 16-10-1958 | உதிர்வு 23-10-1991

திதி: 24-10-1999

அம்மா நீங்கள் இருந்தபோது எங்களுக்கு
எல்லாமே இருந்தது
நீங்கள் இல்லாத போது ஒன்றுமே இல்லையம்மா
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டகலாது.

தங்கள் பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்.

மலையந்தோட்டம்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

(70236)

## நெஞ்சம் மறக்காத 90 ஆம் நாள் நினைவுகள்

தோற்றம் 25 – 09 – 1931



மறைவு 28 – 07 – 1999

கம்பர் மலை

திருமதி சிவகாமி இராமச்சந்திரன்
(மம்மி)

எங்கள் நெஞ்சில் ஆலயமாக அமைந்த குடும்பத் தலைவி அவர்களின் ஆத்மா சாந்தியடைய நெற்கொழு ஆதி வைரவரை வேண்டி நிற்கும் பாசமிகு

திரு. ம. இராமச்சந்திரன்
(குடும்பத் தலைவன்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சிவகோட்டம்',
கம்பர் மலை,
உடுப்பிட்டி வடக்கு.

(70221)

## எண்ணெய்க்காப்பு நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 24

கொழும்புத்துறை, புங்கன் குளம் வில்வையடி ஸ்ரீ நாக பூஷணி அம்பாள் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி தொடக்கம் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (ம)

## திரிபோஷா மா விநியோகம்

சண்டிலிப்பாய். ஒக். 24

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தாய் — சேய் நல சிகிச்சை நிலையங்களில் கிளினிக்குகளில் நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் திரிபோஷா மா வழங்கப்படவுள்ளது.

யாழ்.சுகாதார திணைக்களம்300 பாக் திரிபோஷா மாவைஇவ்வைத்திய அதிகாரி பிரிவுக்கு கடந்தவாரம் அனுப்பி வைத்துள்ளது.

போஷாக்குக் குறைந்த கர்ப்பிணித் தாய்மாருக்கும் குழந்தைப் பிள்ளைகளுக்கும் இந்த மா கிளினிக்குகளில் இலவசமாக வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

## தேவை

கந்தோர் வேலைக்கு
ஆங்கில தட்டெழுத்தாளர்
தேவை.

தொடர்பு:
இல. 3, நவீனசந்தை
(மேல்மாடி)
(மக்கள் வங்கிஅருகில்)
யாழ்ப்பாணம்.

(70232)

## வாழ்த்துகின்றோம்

| பெயர் | புள்ளி |
|---|---|
| 1. S. அதித்தன் | 140 |
| 2. V. நிக்ஸன | 137 |
| 3. K. பிரதீபன் | 140 |
| 4. J. காயத்திரி | 146 |
| 5. V. விஜயகுமாரி | 122 |

5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியெய்திய மேற்குறித்த மாணவச் செல்வங்களை
அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்
உளமார வாழ்த்துகின்றார்கள்.

யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கிலப் பாடசாலை.

(70245)

## மாபெரும் இசை நிகழ்ச்சி

கைதடி மத்தி வளர்மதி சனசமூக
நிலையத்தின் வளர்ச்சி நிதிக்காக
ஈழத்தின் முன்னணிப் பாடகர்களை
ஒன்றிணைத்து வழங்கும்

### அருணாவின் இசை மழை

இடம்: கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்
காலம்: 07--11--1999 (ஞாயிறு)பி. ப. ஒரு மணி (S.L.T.
அன்றைய தினம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் இடம்பெறும்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உங்கள் பிரவேசம்:- 20 ரூபா மட்டும்.

அன்பளிப்பு :-



துஷா ஒப்ரிசன்ஸ்
கண்பரிசோதித்து கண்ணாடி
வழங்குபவர்கள்
544, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9476)

## கேள்வி அறிவித்தல்

### வலயக் கல்வித் திணைக்களம், தென்மராட்சி.

கீழே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் தென்மராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி முற்பகல் 10 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10. 30 மணிக்கு திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| பாடசாலைப் பெயரும் தளபாட விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|
| கிளி/பளை மத்திய கல்லூரி ''ஏ'' மாதிரியான உருக்கு மேசை, உருக்குக் கதிரை செய்து வழங்குதல். | 250/- | 1400/- |

01. மேற்படி வேலைக்கு பதிவு செய்யப்பட்ட தொழிற்பட்டறை உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர்

02. வேலைகளுக்கு அமைவாக மேற்சொல்லப்பட்ட கேள்விப் பணத்தைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து கேள்விப் பத்திரங்களை 25 ஆம் திகதியிலிருந்து 27 - 10 - 1999 ஆம் திகதி நண்பகல் 10. 00 மணிவரை கல்வித் திணைக்கள பாடசாலைக் கட்டட வேலைகள் பகுதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

03. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு மூலப்பிரதியும் இணைப் பிரதியும் தனித்தனி இரு கடித உறைகளில் இடதுபுற மேற்பக்கத்தில் வேலையின் விவரமும் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிற் போட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு ''தலைவர்'' கேள்விச் சபை வலய கல்வித் திணைக்களம், தென்மராட்சி, சாவகச்சேரி என விலாசமிடப்பட்டு மேற்படி திணைக்களத்தில் வலயக் கல்விப் பணிப்பாளரின் அலுவலக அறையினுள் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரப் பெட்டியில் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி முற்பகல் 10. 00 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கால நேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

04. தெரிவு செய்யப்படும் ஒப்பந்தகாரர் 1999 - 12 - 31 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து வேலைகளையும் பூர்த்தி செய்து கையளித்தல் வேண்டும் எதுவித கால தாமதங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலைக் கட்டட வேலைகள் பகுதியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகின்றேன்.

திரு. வ செல்வராஜா,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

பாடசாலைகள் கட்டட வேலைகள் கிளை,
வலயக் கல்வித் திணைக்களம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.

(சி/9467)

# குளோபல் தொலைத் தொடர்பு சேவை

பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

தொலைபேசி இலக்கங்கள்:

| உள்நாடு: | வெளிநாடு: |
|---|---|
| 070 212437 | 0094 70212437 |
| 070 212627 | 0094 70212627 |

**இரவு பகல் / சேவை**

(70237)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மா/மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

**5ஆம் தர**

## புலமைப் பரீட்சை பெறுபேறு - 1999

| | |
|---|---|
| J. காயத்திரி | 146 |
| S. ஆதித்தன் | 140 |
| K. பிரதிபன் | 140 |
| V. நிக்ஸன் | 137 |
| V. விஜயகுமாரி | 122 |

பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து கல்விப்பாதையில் உயர்ந்திட வழி வகுத்த அதிபர் ஆசிரியர்களையும் விசேடமாக பயிற்சியளித்த ஆசிரியர்கள் திரு. T. சிவஞானம் செல்வி A. ஜெயசிங்கம் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

– பெற்றோர்

(70246)

# திருமண அழைப்பு

♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் ஐப்பசி மாதம் 8 ஆம் நாள் (25-10-99) திங்கட்கிழமை பகல் 9.00 மணிமுதல் 9.30 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

திருநிறை செல்வன்
**இரங்கநாதன்**
B. B. A [Hons]
அவர்களுக்கும்



திருநிறை செல்வி
**விஜயகுமாரி**
B Com [Hons]
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு பருத்தித்துறை புலோலி சிவன் பசுபதீஸ்வரர் ஆலயத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதைத் தொடர்ந்து மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இருவீட்டார் அழைப்பு)
(முக்கிய குறிப்பு: தனிப்பட்ட அழைப்பு இல்லை
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி புவனேஸ்வரி சின்னத்தம்பி,
"சின்னத்தம்பி வளவு"
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

திரு. திருமதி இராசதுரை,
(ராஜன் சைக்கிள் வேக்ஸ்)
ராஜன் வீடியோ மூவிஸ் சென்ரர்
ராஜன் தொலைத் தொடர்பு சேவை
மஹாலக்சுமி பல்பொருள் விற்பனை நிலையம்
வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.

(70209)


A GURANTEED PRODUCT

# KOBE

## ANTENNA BOOSTER NO:1 SELLER IN SRI LANKA

FROM LANKA NIPPON

AVAILABLE ISLANDWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

**LANKA NIPPON**

18. KEYSER STREET, COLOMBO-11
Tel: 324726, 437735 FAX: 437736

(சி/9184)



### மூவ்.




மூட்டு வலி, முதுகு வலி, வாதம், வீக்கம், தசைப்பிடிப்பு என்பவற்றுக்கான உடனடி நிவாரணி.

### க்ராக் கீரீம்.




இது பாதங்களில் ஏற்படும் வெடிப்பினால் உண்டாகும் இரத்தக் கசிவு, காயம், எரிச்சல் குணமாக்கி வெடித்த குதிகால்களை அழகாக்கவும், மென்மையாகவும் செய்கிறது 14 தினங்களில் மட்டுமே

### போரோசொப்ட்.




பிசுபிசுப்பற்றது. கற்றாழைச்சாறு கலந்தது. முகத்தில் பருக்களினால் ஏற்பட்ட காயங்களை குணமாக்கி கரும் புள்ளிகளை அகற்றுகிறது. இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் பருக்கள் வரவிடாமல் தடுப்பதோடு முகத்தை வெண்மையாக்கி பொலிவடையச் செய்கிறது.

### ஸ்டாப்பேக் க்ரீம்.... பாம்




இது தலைவலியை நொடியில் பறந்தோடச் செய்கிறது. இதன் பிசுபிசுப்பற்ற தன்மை நெற்றியில் திட்டு திட்டாய் படியாமல் இலகுவில் காய்ந்து தடிமன், உடல் வலிகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கிறது

### வின்டர் ஷீல்ட்




சந்தனம், வெஸ்லீன், இயற்கை மூலிகைகள் அடங்கியது. இது சருமத்தை உலர்விலிருந்து பராமரிப்பதோடு மேனியை பொலிவடையச் செய்கிறது. இதில் அடங்கியுள்ள விசேட மூலிகைகள் கரடு முரடான உள்ளங்கைகளை மிருது வாக்குவதோடு, தோல், உதடு வெடிப்பிலிருந்து ம் நிவாரணம் தருகிறது.

### டி'கோல்ட் க்ளியர்



வெது வெதுப்பானது சளி, தடிமன், தொண்டை கரகரப்பு, மூக்கடைப்பு ஆகியவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

### இட்ச்காட் டெர்மிகூல் பிரிக்லி-ஈட் பவுடர்




இதன் குழுமையான பார்மியுலா வியர்க்குரு மற்று ம் உடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதோடு நறுமணத்தையும் தருகிறது.

* பல கோடி இந்திய மக்களின் நம்பிக்கையை வென்றதும், உலகின் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் சந்தைப்படுத்தப்பட்டுள்ளதுமான "பராஸ்" தயாரிப்புக்கள் சர்வதேச தரம் கொண்டது

* எமது "பராஸ்" ஆயுர்வேத மருத்துவ தயாரிப்புக்களின் சர்வதேச தரத்தை அறிந்து கொள்ள அனைத்து"பராஸ்" தயாரிப்புக்களின் மேலுறைகளில் சர்வதேச வியாபாரக் குறியீடு 8901177 200250 மற்றும் உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி அச்சிடப்பட்டுள்ளதா என்று கவனித்து வாங்குங்கள்.

குறிப்பு:- எமது பொருட்களின் அட்டைப் பெட்டியில் சர்வதேச வியாபாரக் குறியீடு பொறிக்கப்பட்டுள்ள பகுதியினை கத்தரித்து கவனமாக சேர்த்து வையுங்கள். அதிகப்படியாக சேர்ப்பவர்களுக்கு மாபெரும் பரிசு மழையின் போட்டி விரைவில் அறிவிக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் எமது ஏக விநியோகத்தர்:- **JEGAN PHARMACY, 462/B, HOSPITAL ROAD, JAFFNA. TEL: 2194.**
"பராஸ்" தயாரிப்புக்களை யாழ்ப்பாணம் முழுவதும் உள்ள மருந்தகங்கள், சில்லறை கடைகள், பல்பொருள் வணிக நிலையங்கள் மற்றும் அழகு சாதன கடைகள் என்பவற்றில் பெற்றுக் கொள்ள முடியும்.

இறக்குமதி செய்து விநியோகிப்போர்:- **PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.
NO. 629/1, NEGOMBO ROAD, MABOLA, WATTALA.
PHONE:- 01-939167, 074 - 817642. FAX: 01-939167**


# யாழ்ப்பாண பல்கலைக்கழக விஞ்ஞானபீடம்

விஞ்ஞானபீட அரையாண்டுக்கான விரிவுரைகளும், செயன்முறை வகுப்புக்களும் 01—11—1999 (திங்கட்கிழமை) ஆரம்பமாகும்.

— பதிவாளர்.

(சி/9466)


# எழுதுவினைஞர்

போட்டிப் பரீட்சைக்கான

## விசேட வகுப்பு

ஆரம்பம்: 25-10-99
காலை 9 மணி (ப.நே)

ஆசிரியர்:
R. T. தவசேகர்

குறிப்பு:-
திங்கள் முதல் வெள்ளி வரை 15 மணித்தியாலங்கள் நடைபெறும்.

**D. M. I.**
யாழ்ப்பாணம்.

D. SAM

(c/9450)




### கான்பூர் டெஸ்ட் போட்டியில்

## ஒரு விக்கெட் இழப்புக்கு இந்தியா 212 ஓட்டங்கள்

கான்பூர், ஒச். 24

இந்திய — நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் கான்பூரில் நடைபெறும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக தனது முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 256 ஓட்டங்களைப்பெற்றது.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 212 ஓட்டங்களைக் குவித்தது. இதில் டெவன் காந்தி 88 ஓட்டங்களையும் சடகோபன் ரமேஷ் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களையும் ராகுல் ட்ராவிட் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

மூன்றாவது நாள் ஆட்டம் இன்று தொடரும்.

(இ-8)

### சார்ஜா கிரிக்கெட்

## பாக். அணி பெற்ற வெற்றி ரசிகர்கள் மத்தியில்சர்ச்சை

நேற்று முன்தினம் நடைபெற்றஇலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான சார்ஜாகிண்ணப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றமை குறித்து கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பலத்த சர்ச்சை கிளம்பி உள்ளது.

இலங்கை அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் அரவிந்த டி சில்வா அடித்த பந்தை பிடிக்க முற்பட்ட இன்ஸமாம் பந்து நிலத்தில் அடிபட்டபின்பே பிடித்து அந்தப் பிடியைச் சமாளித்து விட்டார் எனவும் —

அதற்கு ஒத்திசைத்தாற்போல் மூன்றாவது நடுவரும் அரவிந்த டி சில்வா ஆட்டமிழந்ததாக அறிவித்து விட்டார் என்றும்-கூறப்படுகிறது

அடுத்ததாக ஆட்டமிழந்த விக்கெட் காப்பாளர் களுவிதாரண தடுக்க முற்பட்ட பந்து மட்டையில் பட்ட பின்பே காலில் பட்டது எனவும் அதனை நடுவர் எல். பி. டபிள்யு முறையில் ஆட்டமிழந்ததாக அறிவித்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இது தொடர்பாக பல கிரிக்கெட் அவதானிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்த பிழையான முடிவுகளால் தமது அணியின் வெற்றியின் உறுதித் தன்மை குலைந்து விட்டது என இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

(உ-4-8)

## மென்பந்து கிரிக்கெட்

கல்வியங்காடு, ஒக். 24

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட ''பரா'' வெற்றிக் கேடயத்துக்கான மாபெரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் விவரம் வருமாறு:-

★ காலை 10-30 மணிக்கு போத்ஸ்ரார் வி.க.எதிர் ஈச்சமோட்டை வி. க.

★ நண்பகல் 12 மணிக்கு துர்க்கா வி க. எதிர் விக்ரறி வி. க

★ பிற்பகல் 2 மணிக்கு அரியாலை ஐ வி.க. எதிர் வெங்கடேஸ்வரா வி. க.

★ பிற்பகல் 3-30 மணிக்கு கரவெட்டி ஸ்ரீமுருகன் வி. க. எதிர் நொதேண் வி.க.

(இ-8)

## உதைபந்தாட்டம்

நாவாந்துறை, ஒக். 24

நாவாந்துறை சென். நிக்கலஸ் சன சமூக நிலையம் தனது ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இடம் பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4 மணிக்கு சென் றோக்ஸ் வி. க. எதிர் கலைவாணி வி க.

★ மாலை 5மணிக்கு பொற்பதி வி. க. எதிர் யுக்காமல் வி. க

(இ-8)

## வெள்ளி விழா இறுதிநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம். ஒக். 24

யாழ். பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டுக்கான கொண்டாட்டங்களின் இறுதி நாள் நிகழ்வுகள் நாளை 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு கைலாசபதி அரங்கில் நடைபெறும்

இந்த நிகழ்வில் பல்கலைக் கழகச் சேவையில் இருந்த பொழுதும் சேவையிலிருந்து விலகிய பின்னரும் மறைந்தவர்களுக்கான அஞ்சலி தெரிவிப்பு இடம்பெறவுள்ளது.

(இ-10)

## லியோக் கழக பதவி ஏற்பு வியாழனன்று

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 1999/2000 ஆண்டுக்கான லியோக் கழகத்தின் புதிய உறுப்பினர்களுக்கான பதவி ஏற்பு வைபவம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11-30 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும். நாளை திங்கட்கிழமை நடைபெற விருந்த இந்த நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்படி புதிய திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்தில் கொண்டு கல்லூரியின் சகல லியோக் கழகப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளுமாறு கல்லூரியின் லியோக் கழக ஆசிரிய ஆலோசகர் தயாபரன் அறிவித்துள்ளார்.

(இ)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 24

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி ராஜலட்சுமி பாலசுந்தரம் பிள்ளை வழங்குவார்

(இ-5)

## பனையால் விழுந்து காயம்

நெல்லியடி, ஒக். 24

பனை மரத்தில் ஓலை வெட்ட ஏறியவர் மரத்திலிருந்து தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சமரபாகு. மாவடியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த நடேசு ரவிச்சந்திரன் (வயது 20) என்பவரே காயமடைந்த இடுப்பு எலும்பு முறிந்து நிலையில் மந்திகை மருத்துவமனையிலிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(இ-109)

## குமண, வாதுவ கப்பல்கள் காங்கேசனில்

யாழ்ப்பாணம், ஒக். 24

கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கான பொருள்களை ஏற்றிக் கொண்டு குமண மற்றும் வாதுவ கப்பல்கள் வந்து சேர்ந்துள்ளன.

காங்கேசன்துறைக்கு வந்து சேர்ந்த குமண கப்பலில் யாழ் செயலகத்துக்கென உணவுப் பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் வாதுவ கப்பலில் தனியாருக்கான பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த இரு கப்பல்களிலும் பொருள்கள் இறக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது

[இ-9]

### செட்டிகுளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

வழங்குவதாகத் தெரிவித்திருந்தது

இப்படித் தெரிவிக்கப்பட்ட ஒரு சில நாள்களிலே மின்மாற்றி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது

(இ-5-6-21-164)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

மடைந்த 7 பேர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து குறிக்கப்பட்ட பகுதியில் உடனடியாக படையினரால் தேடுதல் நடத்தப் பட்ட போதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

[இ-5-6-164]

# புதிய பஸ் டிப்போ கிடைத்தது காரைநகர் மக்களுக்கு வரப்பிரசாதம்

### போக்குவரத்துச் சபை முகாமையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 24

இன, மத, சமய வேறுபாடுகள் இன்றிப்பணி புரிய வேண்டும் என்ற உயர் நோக்கத்தைக் கொண்டுள்ள நான் பின் தங்கிய, அழிந்த நிலையில் இருந்த இந்த டிப்போவை மீளவும் இயங்க உதவிகள் வழங்கினேன். இந்தப் பிரதேச மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இந்த டிப்போ கிடைத்துள்ளது

மத்திய போக்குவரத்துச் சபைப்பொது முகாமையாளர் எம். சி. பிரேமரத்தின மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமாகாண மீள் குடியமர்வு புனர்வாழ்வு அதிகார சபையின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட காரைநகர் பஸ் டிப்போவை சம்பிரதாய பூர்வமாக நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கூட்ட ஆரம்பத்தில் பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் டிப்போவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் வி. எஸ், சொக்கலிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில் பிரேமரத்ன மேலும் கூறியதாவது:-

இன, மத, சமய வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழ் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டு வருகின்றோம்.

எமது சபையின் ஊழியர்கள் கொழும்புக்கு வரும் சமயம் பலவித பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் மனித நேயத்துடனும் எமது சக ஊழியர்கள் என்ற நோக்கத்துடன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றோம்.

இந்த டிப்போ புனரமைக்கப்பட்டு தேவையான உபகரண மற்றும் கட்டட வசதிகளை வழங்கியுள்ளோம். இந்தப் பகுதி மக்கள் இது வரை காலமும் எதிர் நோக்கி வந்த போக்குவரத்துப் பிரச்சினைக்கு இன்று தீர்வுகிடைக்கின்றது இன்று முதல் 3 பஸ்கள் இங்கிருந்து யாழ்ப்பாண நகருக்கு சேவையில் ஈடுபடும் —என்றார்.

வடபகுதி மீள் குடியமர்வு. புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் என். கே. ஓபடகே பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற வகையில் இந்தப் பகுதி மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைச் சீராக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். இந்தப் பிரதேச மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் முன்வைக்கப்பட்ட திட்டங்களுக்கு உதவி வழங்கியுள்ளோம்—என்றார்.

வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ. பி. டி. பி. அமைப்பின் வட்டுக் கோட்டை அமைப்பாளருமான க. திரிலோகநாதன் பேசுகையில் கூறியதாவது:-

குடாநாட்டை அபிவிருத்தி செய்யப் போவதாக பெயரளவில் அரச அதிகாரிகள் கூறிக் கொண்டிராமல் செயலில் காட்டவேண்டும். அப்போது தான் அபிவிருத்தித் திட்டங்களை முன் எடுக்கமுடியும்.

நாட்டின் தீவிரமடைந்துள்ள யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர விடுதலைப் புலிகளும், ஐ தே. கவும் முன் வரவேண்டும்—என்றார்.

வடபிராந்தியபோக்குவரத்துச் சபை பொது முகாமையாளர் வி. எஸ் சொக்கலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

96 ஆம் ஆண்டு குடாநாட்டுக்குள் மக்கள் மீளக் குடியமர்ந்த போது இரண்டு பஸ்களுடன் சேவையை ஆரம்பித்த எமது சபை இன்று கூடுதல் பஸ்களைப் பெற்று போக்குவரத்துச் சேவையை சீராக்கியுள்ளது. இந்தச் சேவை மேலும் சீராக சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் — என்றார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜன், வர்த்தகர் சங்கத் தலைவர் குணரத்தினம், உட்படப் பலர் உரையாற்றினர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் சார்பில் மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் பிரேமரத்னாவுக்கு வாழ்த்து மடல் கையளிக்கப்பட்டது.

(ஜ-3)


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### 2000 ஆண்டுக்கான

## புதிய அனுமதி

பின்வரும் வகுப்புகளுக்கான புதிய அனுமதிக்காக கல்லூரியால் விண்ணப்பங்கள்.

**10 - 11 - 1999** புதன்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. முதலாம் வகுப்பு

(ஏற்கனவே விண்ணப்பித்தோர் புதிதாக விண்ணப்பிக்கத் தேவையில்லை. நேர்முகத் தேர்வு 14 - 11 - 99 ஞாயிறு காலை 10.30 மணிக்கு நடைபெறும்.)

2. ஆறாம் வகுப்பு

(100 புள்ளிகளுக்கு மேல் புலமைப் பரிசில் பெற்றோர் மட்டுமே அலுவலகத்தில் பெறும் புதிய விண்ணப்பப் படிவத்தில் மட்டும் விண்ணப்பிக்கலாம்.)

★ 7 ஆம் வகுப்பு, 8 ஆம் வகுப்புத் தவிர்ந்த ஏனைய வகுப்புகளுக்கு வெற்றிடங்களுக்கேற்ப அனுமதி வழங்கப்படும்.

க. இராசதுரை
அதிபர்

(சி/9501)

# மக்கள் வாழ்இடம், பயிர் நிலங்களில் மிதிவெடிகள் முதலில் அகற்றப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 24
மக்கள் மீள் குடியமர்வு பகுதி மற்றும் விவசாய நிலங்கள் போன்ற இடங்களிலுள்ள மிதிவெடிகள் முன்னுரிமை அடிப்படையில் அகற்றப்பட வேண்டும் என்று மிதிவெடி வழி நடத்தல் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் மற்றும் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட கண்ணிவெடிகள் அகற்றும் நிபுணர், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய இந்தக் குழுவின் வழி நடத்தலிலே யாழ். மாவட்டத்தில் மிதி வெடியகற்றும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவின் தீர்மானத்தின் படி தற்பொழுது அளவெட்டி அருணோதயாக் கல்லூரி வளவில் சிம்பாப்வே மிதிவெடியகற்றும் நிபுணர்களினால் மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் மிதி வெடிகள் அகற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பேசாலை...

(முதலாம் பக்கத் தொடர்)

அதே சமயம் பேசாலைப் பொலீஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை விமானப்படை, கடற்படை மற்றும் இராணுவம் போன்றவற்றின் உதவியுடன் முறியடித்து விட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஹெலிக்கொப்டர் மற்றும் கடற்படைப் பீரங்கிப் படகுகள் என்பன பயன்படுத்தப் பட்டன என்றும் —

விடுதலைப் புலிகளின் வள்ளம் ஒன்றும் சேதமாக்கப் பட்டதுடன் மேலும் ஒரு வள்ளத்தை அவர்கள் கைவிட்டுச் சென்றுள்ளனர் என்றும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்தது.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எந்தத் தகவலும் வெளியாகவில்லை.

(இ-5-6-164-21)


எமது
புதிய வீடியோ CD
வெளியீடு!

மாய மாளிகை
[பேய் மாளிகையில் ஆவியின் அட்டகாசம்]

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/9502)



அதிரடிப் புயல்
ஷண்ணின்
அட்டகாசமான செய்தி
கொழும்பு விலையில்
ஓடியோ CD கள்
விற்பனை!

- தரமான அலையோசை
- பிரமிட் தயாரிப்புக்கள்
- தாஜ்மகால் CD

உட்பட
விமானக் கட்டணமும் இல்லை.
ஆச்சரியமா?
இன்றும் நாளையும்
இச்சலுகை
★ போஸ்ரர்கள் பெருமளவில் விற்பனைக்கு உண்டு.

ஷண்
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
[70287]


## பங்களாதேஷில் ஹர்த்தால்

டாக்கா, ஒக். 24
பங்களாதேஷில் எதிர்க் கட்சியினர் நேற்று நடத்திய ஹர்த்தால் காரணமாக அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் தலைமையில் நான்கு எதிர்க் கட்சிகள் இணைந்து அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்றும், நாடாளுமன்றத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் எனவும் கோரி இந்தக் ஹர்த்தாலை நடத்தின. ஹர்த்தாலை அடுத்துக் கடைகள் மூடப்பட்டதுடன் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து பாடசாலைகள் — இயங்கவில்லை. வீதிகளில் மக்கள் நடமாட்டம் காணப்படவில்லை.

(ஐ-6)

## இஸ்லாமியத் தொண்டர்கள் விடுதலை

இஸ்லாமாபாத், ஒக் 24
பாகிஸ்தானில் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதர்மர் நவாஸ்ஷெரீப் அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நூற்றுக்குமேற்பட்ட இஸ்லாமியத் தொண்டர்கள் இராணுவ ஆட்சியாளர்களால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் கார்கில் எல்லையைக் கடந்து இந்தியப் பகுதிக்குள் சென்றிருந்த ஊடுருவல்காரர்களை நவாஸ் ஷெரீப் அரசு வெளியேற்றியதை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமைக்காக இவர்கள் முன்னர் சிறைவைக்கப்பட்டிருந்தனர்.

[ஐ-6-9]

## சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்)

உரை நிகழ்த்தினார்.

அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்குடனேயே தீப்பெட்டி மற்றும் ''லைட்டர்''களை கூட்டத்துக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டது என்றுபொலீஸார் தெரித்தனர்.

தீப்பெட்டிகள் மற்றும் ''லைட்டர்''யாவும் பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட பின்பே பொதுமக்கள் கூட்டத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (இ-6)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதனை நாடாளுமன்றில் நிறைவேற்றுவேன்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நாம் நாட்டை ஆண்ட விதம் மக்களுக்கு திருப்தி அளிப்பதாக உள்ளது.

நாட்டில் இடம்பெறும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை நிலை நிறுத்த எம்மை மீண்டும் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்காகவே நாம் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துகின்றோம்

சமாதானத்திட்டம் குறித்து பேச மறுத்தவர்கள் விடுதலை புலிகள் தான். எமது அரசாங்கம் அல்ல. தீர்வுத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் பேச்சுக்களில் ஈடுபட புலிகள் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப் படலாம்.

இப்படி ஜனாதிபதிதெரிவித்தார்.

### அ' புரம் கூட்டத்தில் உரை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல பிரசாரக் கூட்டத்தை நேற்று மாலை அனுராதபுரத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது ஜனாதிபதி கூறியதாவது:-

வடக்கு—கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக எமக்கு வலுவான ஆணையை வழங்குங்கள். மக்கள் அவ்வாறு ஆதரவு வழங்கும் பட்சத்தில் தற்போது எதிர்நோக்கும் அரசமைப்பு முட்டுக்கட்டைகளை நீக்க முடியும்.

மக்கள் தெளிவான ஆணை வழங்கினால் 2 ஆயிரமாம் ஆண்டின் முடிவுக்கு முன்னர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபோது எதிர்நோக்கிய பிரச்சினைகளில் வடக்கு—கிழக்கு யுத்தம் இன்னும் எஞ்சி உள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசமைப்புத் தடையாக உள்ளது. சகல சமூகத்தவர்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் அரசியல் தீர்வு யோசனைகளை முன்வைத்தது. இந்த யோசனைகளுக்கு சகலரும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

எனினும் முன்னைய அரசாங்கததால் கொண்டுவரப்பட்ட அரசமைப்பு விதிகளின் படி இதை அமுல் படுத்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை நாடாளுமன்றில் தேவையாக உள்ளது.

அதனால் அரசியல் தீர்வு யோசனைகளுக்கு ஆதரவு வழங்குமாறு ஐ.தே.க. விடம் பல ஆண்டுகளாக கோரப்பட்டது. எனினும் அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தீர்வு தொடர்பான யோசனைகளை அமுல்படுத்துவதற்கு மக்களின் ஆதரவைப் பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இதனை நோக்காகக் கொண்டே ஜனாதிபதித் தேர்தல் முன்கூட்டியே நடத்தப் படுகின்றது.

உண்மையான நாட்டுப்பற்றுள்ள சகலகட்சிகளும் அடுத்த 2 ஆயிரமாம் ஆண்டில் நாட்டில் சமாதானத்தை நிலை பெறச் செய்ய ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டும். இந்த வகையில் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான தகுந்த சூழ்நிலையை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

இப்படி அவர்தெரிவித்தார்.

(இ-6-8)


சிற்றியின் அதிரடி மலிவு விற்பனை
குதூகலமான உங்கள் தீபாவளியின் செலவை மீதப்படுத்த
விற்றுத் தீர்த்தல்
இன்றே முந்துங்கள் இன்னும் சில தினங்கள் மட்டுமே
சிற்றி ரெக்ஸ் அன் ரெயிலர்ஸ்
73, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(சி/9409)


# யாழ்.பஸ் நிலையப் பகுதி கடைகளை அகற்ற பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 24
யாழ். பஸ் நிலையப் பணிமனைக்கு அருகில் உள்ள சிறிய கடைகளை அகற்றுமாறு யாழ். மாநகரசபையால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட பகுதியில் 15 கடைகள் வரை அனுமதியற்ற இடத்தில் அமைந்துள்ளன என்றும்—

ஏற்கனவே பல தடவைகள் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதும் கடைகள் எதுவும் அகற்றப்படவில்லைஎன்றும்— கூறப்படுகிறது.

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்பாக கடைகளை அகற்றுமாறும் தற்காலிக மாற்று ஏற்பாடாக காங்கேசன்துறை வீதியில் சத்திரத்துச் சந்திக்கு மேற்குப்புறமாக இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

## எழுதுநர் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக். 24
அரச எழுதுவினைஞர் மற்றும் அது தொடர்பான சேவைகளுக்கு ஆள் சேர்ப்பதற்கானபொதுப்போட்டிப் பரீட்சை நவம்பர் 6ஆம்திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் 65 நிலையங்களில் நடை பெறவுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான அனுமதி அட்டைகள எதிர்வரும் 27 ஆம் திகதிகளின்பின் அனுப்பி வைக்கப்படும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன

(இ-5)

## இருவர் காயம்

நெல்லியடி, ஒக். 24
வல்லைவெளிப் பகுதியில் நேற்று நண்பகல் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலீஸ்காரர் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர். (இ-109)

## கொழும்புக்கு பனஞ்சாராயம்.

யாழ்ப்பாணம், ஒக். 24
யாழ்ப்பாணத்தில் இருந்து மேலும் ஒரு தொகுதி பனஞ்சாராயம் கொழும்புக்குக் கப்பல் மூலம் அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனஞ் சாராயத்துக்கு கொழும்பு வாடிக்கையாளர் மத்தியில் நல்ல வரவேற்பு ஏற்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்று பனை அபிவிருத்திச் சபை முகாமையாளர் எஸ் கோகுலதாசன் தெரிவித்தார்.

அண்மையில் முதல் தடவையாக கொழும்புக்கு அனுப்பப் பட்ட சுமார் 40 ஆயிரம் போத்தல் பனஞ் சாராயமும் விற்றுத் தீரும் தறுவாயிலுள்ளதாகவும்—

அதைத் தொடர்ந்தே இரண்டாம் கட்டமாக மேலும் 50 ஆயிரம் போத்தல் பனஞ்சாராயம் கடந்த வாரம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-9)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்த பயணிகளும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[இ-5-6-21]

## ஒட்டுசுட்டானில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டது.

இந்த மோதலில் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை.

(இ-6)

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவர்களது மண்டை ஓடுகள் மற்றும் எலும்புகளில் இவர்கள் கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை காலிகரகம்பிட்டிய வைத்தியசாலையில் எலும்புக்கூடுகள் மீதான மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றன. இந்தப் பரிசோதனைகளுக்கு அமெரிக்க மண்ணியல் நிபுணர் பேராசிரியர் பிரான்ஸிஸ் லீ மற்றும் நரம்பியல் வைத்திய நிபுணர் கெபின்லியின் ஆகியோர் உதவி செய்தனர்.

ஆரம்பக்கட்டப் பரிசோதனைகள் முடிவடைந்த நிலையில் உடனடியாக அடையாளம் காணக்கூடிய நிலையில் உள்ள 6 எலும்புக் கூடுகள் மரபணு சோதனைகளுக்காக அமெரிக்கா அல்லது லண்டனுக்கு எடுத்துச் செல்லப் படஉள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5-6-21-164.)

## இடதுசாரிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐக்கிய சோஷலிஸ முன்னணி) நவசமாஜக்கட்சி,ஜே.வி.பி. போன்ற கட்சிகளுடன் இது தொடர்பாகப் புதிய இடதுசாரி முன்னணி பேச்சு நடத்தி வருகிறது,

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்துவது பற்றி ஜே. வி. பி. கொள்கையளவில் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது— அதே சமயம் தமிழ்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் குறித்து இது வரை இணக்கம் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

(இ-5-6-21)


தோட்ட வேலையாள் தேவை

தோட்ட வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. பூந்தோட்டங்களைப் பராமரிக்கத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் அலுவலக நேரங்களில் நேரில் வரவும்.

முகாமையாளர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-10-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.